விலை ரூபா 40
பக்கங்கள் - 12
# ஒருவன்
ORUVAN - ඔරුවන්
ஆண்டு: 01 இதழ் : 54 குரோதி வருடம் மார்கழி மாதம்
09 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1446 ஜமாதுல் ஆகிரா 22 (24.12.2024)

நாடு முழுவதும் உங்களை நாடி
புத்தம் புதிய பொலிவுடன்
ஆதவன் HD
UHF

## போர்கள் நிறுத்தப்பட வேண்டும்



உலகில் நடைபெறும் போர்கள் நிறுத்தப்பட வேண்டும் என பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ் வலியுறுத்தினார்.

வர்த்திக்கானில் உள்ள புனித பீட்டர் தேவாலயத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற சிறப்புத் திருப்பலியில் உரையாற்றிய பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ் உலகில் நடைபெறும் (தொடர்ச்சி.)

02

## முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பிலிருந்து முப்படைகள் நீக்கம்



( ஆர்.மனோசங்கர் )

முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்புக்காக நியமிக்கப்பட்டுள்ள முப்படையினரையும் திங்கட்கிழமை (23) முதல் அமுலுக்கு வரும் வகையில் நீக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் நடைபெற்ற நாடாளுமன்றக் கூட்டத்தில், முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பிற்காக நியமிக்கப்பட்டுள்ள முப்படையினரை நீக்கும் தீர்மானம் தொடர்பான தகவல்களை பொதுப் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால வெளிப்படுத்தியிருந்தார்.

இதன்படி திங்கட்கிழமை (23) முதல் பொலிஸ் அதிகாரிகள்மாத்திரமே முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பு பணிகளில் ஈடுபடவுள்ளனர்.

தற்போது பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள பொலிஸாரின் எண்ணிக்கையும் குறைக்கப்பட்டுள்ளதுடன், முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பிற்காக போதியளவு பொலிஸார் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக அரசாங்கம் தெரிவித்து ள்ளது.

எவ்வாறாயினும், முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பு ஆறு மாதங்களுக்கு ஒருமுறை மீளாய்வு செய்யப்பட்டு, அதற்கேற்ப பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்படும் எனவும் அரசாங்கம் குறிப்பிட்டுள்ளது. (தொடர்ச்சி.)

02

## ரோஹிங்கிய அகதிகள் கேப்பாபிலவு முகாமில்



( எஸ்.கீதபொன்கலன் )

திருகோணமலை ஜமாலியா முஸ்லிம் மகா வித்தியாலத்திலிருந்து நேற்று (23) மிரிஹான தடுப்பு முகாமிற்கு அழைத்துச் செல்லப்பட்ட மியான்மார் ரோஹிங்கிய அகதிகள், தற்போது முல்லைத்தீவு மாவட்டம் கேப்பாபிலவு விமானப் படை முகாமிற்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

இது திடீரென எடுக்கப்பட்ட முடிவாகவே தெரிகிறது. இது தொடர்பாக, பிரதிஅமைச்சர் அருண் ஹேமச்சந்திரவிடம் கேட்ட போது, மிரிஹானவுக்கு கொண்டு செல்வதற்குதான் திட்டமிடப்பட்டது. என்றாலும் அங்கு இடப்பற்றாக்குறை இருப்பதனால், கேப்பாபிலவுக்கு கொண்டு செல்ல தீர்மானிக்கப்பட்டுள்ளது." என அவர் கூறினார்

## ஏட்டிக்கு போட்டி: கொழும்பில் இந்திய, சீன கப்பல்கள்

(கனூஷியா புஷ்பகுமார்)

இலங்கைக்கு வருகைத்தரும் சர்வதேச கப்பல்களுக்கு அனுமதியளிக்கும்





தேசிய கொள்கையொன்றை உருவாக்க அரசாங்கம் தீர்மானித்துள்ள நிலையில் இந்திய, சீன இராணுவ கப்பல்கள் தொடரந்து இலங்கைக்கு வருகைத்தந்த

02

“கலாநிதி” பட்டம்:

## அறிக்கை ஜனாதிபதி, சி.ஐ.டியிடம் கையளிப்பு

(கனூஷியா புஷ்பகுமார்)

நாடாளுமன்ற இணையத்தளத்தில் நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்காரவின் பெயருக்கு முன்னால்“கலாநிதி“ என்று பிரசுரித்தமை தொடர்பில் நாடாளு மன்றத்தினால் தயாரிக்கப்பட்ட அறிக்கை ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க மற்றும் குற்றப் புலனாய்வு திணைக்களத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது.

02

## மாணவர்களுக்கான சத்துணவுத் திட்டம் ஜனவரி 27இல்

( முகம்மட் முக்தார் )

நாடளாவிய ரீதியில் உள்ள அரசாங்க பாடசாலை மாணவர்களுக்கு 2025 ஆம் வருட கல்வி ஆண்டுக்கான காலை சத்துணவு வழங்கும் வேலைத்திட்டம் ஜனவரி 27 ம் திகதி ஆரம்பமாகுமென கல்வி அமைச்சு அறிவித்துள்ளது .

தேசியப் பாடசாலைகள் அல்லாத மாகாணப் பாடசாலையில் ஆரம்பக்கல்வி பயிலும் மாணவர்களுக்கு காலை உணவு வழங்கும் (தொடர்ச்சி.)

02

## டிஜிட்டல் அடையாள அட்டை திட்டம்; இந்தியாவுடன் ஒப்பந்தம்



பொதுமக்களுக்கான அரசாங்க சேவைகளை நவீனமயப்படுத்தில் ஒரு கட்டமாக டிஜிட்டல் அடையாள அட்டை திட்டத்தை அரசாங்கம் செயற்படுத்தவுள்ளது. இதற்காக அடுத்த மாதம், இந்தியாவுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்ய

02

## ஞானசாருக்கு மீண்டும் ஆஜராக உத்தரவு

இஸ்லாத்தை அவமதித்த மற்றும் மத நல்லிணக்கத்திற்கு இடையூறு விளைவித்ததாக குற்றம் ( தொடர்ச்சி.)

02

## உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தனித்துப் போட்டியிடும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன

(கனூஷியா புஷ்பகுமார்)

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தனித்துப் போட்டியிடுவதில் அவதானம் செலுத்தி வருவ தாக கட்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன. எவ்வாறாயினும், அதன் பிரதான பங்காளிக் கட்சியான லங்கா சமசமாஜக் கட்சியுடன் மாத் திரம் உடன்படிக்கையை (தொடர்ச்சி.)

02

ශ්‍රී ලංකා පොදුජන පෙරමුණ
Sri Lanka Podujana Peramuna

## இஸ்ரேலிய சிப்பாய் கொழும்பில் இருப்பதற்கான ஆதாரம் இல்லை

( ஆர்.மனோசங்கர் )

பாலஸ்தீன குடிமகன் ஒருவரை கொலை செய்த குற்றச்சாட்டை எதிர்நோக்கியுள்ள கால் ஃபெரன்புக் என்ற இஸ்ரேலிய சிப்பாய் கொழும்பில் இருப்பதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் தங்களுக்கு எந்த உறுதியான தகவலும் கிடைக்கவில்லை என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

“டெர்மினேட்டர்“ என்று அழைக்கப்படும் கால் ஃபெரன்புக்,பாலஸ்தீனிய குடிமகனின் மரணத்திற்கும், உயிரிழந்தவரின் கண்ணியத்திற்கு எதிராக நடந்துகொண்டமைக்கும் பொறுப்பானவர் என்று குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

02

## வாழைச்சேனை பிரதேச செயலக அதிகாரிகள் ஆர்ப்பாட்டம்



(கனகராசா சரவணன் )

மட்டக்களப்பு வாழைச்சேனை பிரதேச செயலக கிராம உத்தியோகத்தர் ஒருவர் தாக்கப்பட்டதைக் கண்டித்து அதற்கு காரணமானவர்களை கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கக் கோரி பிரதேச

02

## 13 வகையான மருந்துகள் பாவனையிலிருந்து நீக்கம்

இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட மேலும் 13 வகையான மருந்து வகைகளை உரிய தரமின்மை காரணமாக கடந்த இரண்டு வாரங்களில் பயன்பாட்டிலிருந்து ஒதுக்கியுள்ளதாக வைத்தியர்கள் மற்றும் சிவில் உரிமைகள் தொடர்பான வைத்தியர்கள் சங்கத்தின்

02



## மின்னொளியில் ஜனாதிபதி செயலகம்

ஜனாதிபதி அலுவலகம், முப்படையினர் மற்றும் பொலிஸார் இணைந்து வருடாந்தம் நடாத்தும் நத்தார் விசேட கரோல் இசை நிகழ்ச்சி, தொழில் அமைச்சரும், பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சருமான அனில் ஜயந்த பெர்னாண்டோ தலைமையில் நேற்று முன்தினம் (22) ஆரம்பமானது. நத்தார் கரோல் இசை நிகழ்ச்சியை முன்னிட்டு

ஜனாதிபதி (தொடர்ச்சி.)

02

## யக்கலையில் துப்பாக்கிச் சூடு

யக்கல, கொஸ்கதவல பகுதியில் மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத இருவர் நேற்று (23) நபர் ஒருவரை துப்பாக்கியால் சுட்டபின்னர் (தொடர்ச்சி.)

02

## மின்சாரக் கட்டண திருத்தம் ; பொதுமக்கள் கருத்தறியும் நடவடிக்கை ஆரம்பம்

(கனூஷியா புஷ்பகுமார்)

மின்சாரக் கட்டண திருத்தம் செய்வது தொடர்பில் பொதுமக்களின் கருத்துக்களைப் பெறுவது தொடர்பான வாய்மூல அமர்வுகள் எதிர்வரும் 27ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளதாக

02

## 2025: ஓய்வூதிய திகதிகள் வெளியீடு உயிர்வாழும் படிவம் நிரப்ப அறிவுறுத்தல்

( முகம்மட் முக்தார் )

அரசாங்க ஓய்வூதியதாரர்களுக்கு 2025 ம் ஆண்டில் ஓய்வூதியம் வழங்கப்படும் திகதிகள் பற்றிய அட்டவணையை ஓய்வூதிய திணைக்களம் வெளியிட்டுள்ளது.

இதற்கமைய 2025 ஜனவரி-10,பெப்ரவரி-10 மார்ச்-10,ஏப்ரல்-09, மே09,ஜூன் -09, ஜூலை-09, ஆகஸ்ட்-07, செப்டம்பர் -10, ஒக்டோபர்-10,நவம்பர்-10,டிசம்பர்-10 ஆகிய தினங்களில் ஓய்வூதியம்வழங்கப்ப டவுள்ளது. இதைவேளை, 2025 க்கான ஓய்வூதியம் பெறுவதற்கான உயிர் வாழ்தலை உறுதிப்படுத்தும் படிவத்தில் இம்மாதம் 15ம் திகதி முதல் பெப்ரவரி 15 வரை தத்தமது கிராம சேவை அதிகாரிகளிடம் ஒப்பமிடல் வேண்டுமெனவும் அவ்வாறு ஒப்பமிடாதோரின் மார்ச் மாத ஓய்வூதியம் நிறுத்தப்படு மெனவும் ஓய்வூதிய திணைக்களம்அறி வித் துள்ளது. வெளிநாடுகளில் வாழும் ஓய்வூதியதாரர்கள் தாம் வாழும் நாட்டிலுள்ள இலங்கை தூதரகங்களில் உயிர்வாழ்வதை உறுதிப்படுத்தும்

படிவங்களை ஒப்படைத்தல் வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

### யக்கலையில்...

தப்பிச்சென்றுள்ளதாக வீரகுல பொலிஸார் தெரிவித்தனர். துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி வீதியில் விழுந்த நபர் படுகாயமடைந்து கம்பஹா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு ள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். குறித்த நபரை தொலைபேசி அழைப்பு மூலம் யக்கல கொஸ்கதவலபிரதே சத்திற்கு வரவழைத்து அந்நபர்பேருந் திலிருந்து இறங்கும் போது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதாகத் தகவல் வெளியாகியு ள்ளது. வீரகுல பொலிஸ் அதிகாரிகள் குழு மற்றும் புலனாய்வு அதிகாரிகள் குழுவும் சம்பவ இடத்திற்குச் சென்று விசார ணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

### ஞானசார...

சுமத்தப்பட்டுள்ள பொதுபல சேனா அமைப்பின் தலைவர் கலபட அத்தே ஞானசார தேரரை கைது செய்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்துமாறு பிறப்பிக்கப்பட்ட பிடியாணையை மீளப்பெறுமாறு கொழும்பு மேலதிக நீதவான் மஞ்சுள ரத்நாயக்க நேற்று (23) உத்தரவிட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் ஞானசார தேரர் முன்னிலையாகாத காரணத்தினால் கடந்த 19 ஆம் திகதி மேலதிக நீதவான் பசன் அமரசேனவினால் இந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் ஞானசார தேரர் நீதிமன்றத்தில் முன்னிலையானதையடுத்து அவர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி இசுரு எதிரிசிங்க, வழக்கின் தீர்ப்பு வழங்கப்படவிருந்த கடந்த 19ஆம் திகதி உடல்நலக்குறைவு காரணமாக சந்தேகநபர் நீதிமன்றில் முன்னிலையாக முடியாமல் போனதாகவும் அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்ததாகவும் தெரிவித்தார். அத்துடன் நாளை (நேற்று) அவர் மீண்டும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுவார் என அவர் மேலும் குறிப்பிட்டார்.

முன்வைக்கப்பட்ட உண்மைகளைப் பரிசீலித்த மேலதிக நீதவான், பிடியாணையை மீளப்பெற்றதுடன், சந்தேக நபரை ஜனவரி 9ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலையாகுமாறு உத்தரவிட்டார்.

# சஜித் கொரிய தூதுவர் கொழும்பில் சந்திப்பு

கொரிய குடியரசின் இலங்கைக்கான தூதுவர் மியோன் லீக்கும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கும் இடையிலான விசேட சந்திப்பொன்று கொழும்பில் இடம்பெற்றது.

இதன்போது, இலங்கைக்கும் கொரியாவுக்கும் இடையில் நீண்டகாலமாக நிலவிவரும் உறவுகளை தொடர்ந்தும் பேணிச் செல்வதற்காக தனது நன்றியை தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, மேலும் இந்த உறவுகளை பேணிச் செல்லுமாறு கோரிக்கை விடுத்தார். அத்துடன் கொரிய குடியரசில் வேலைவாய்ப்புக்களுக்காக இலங்கையர்களுக்கான ஒதுக்கீட்டை அதிகரிக்குமாறும், அந்த வேலைவாய்ப்புக்களுக்கு தேவையான பயிற்சி பெற்ற ஊழியர்களை வழங்குவதற்கு நாடாக உச்சபட்சமாக அர்ப்பணிப்புடன் செயற்படுவதாகவும், அதற்கு எதிர்க்கட்சியிலிருந்தும் தனது பங்களிப்பை வழங்குவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இதன்போது தெரிவித்தார்.

### மாணவர்களுக்கு...

இவ்வேலைத்திட்டத்திற்கென ஒரு மாணவனுக்கு தலா 110 ரூபா வீதம் கல்வி அமைச்சு வழங்க உள்ளதாகவும் மேலும் அறிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை 2025 ம் ஆண்டுக்கென முதலாம் தர மாணவர்களை உத்தியோகபூர்வமாக பாடசாலைகளில் அனுமதிப்பதற்கான தேசிய அனுமதி நிகழ்வு ஜனவரி 31 ம் திகதி இடம்பெறுமெனவும் கல்வி அமைச்சு மேலும் அறிவித்துள்ளது.

இதன் பின்னர் இருவாரங்களுக்கு முதலாம்தர மாணவர்களை இனம்காணும் வேலைத்திட்டம் ஆரம்பமாகும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

### மின்சார கட்டணம்...

இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்த அமர்வுகளில் கட்டண திருத்தம் தொடர்பாக மின்சார சபை சமர்ப்பித்த முன்மொழிவு மற்றும் பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு சமர்ப்பித்த பதில் முன்மொழிவு குறித்து பொதுமக்களின் கருத்துக்கள் பெறப்படவுள்ளன.

இலங்கை மின்சார சபை, அடுத்த 6 மாதங்களுக்கு கட்டண திருத்தம் செய்யக்கூடாது என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் முன்மொழிவுகளை அண்மையில் சமர்ப்பித்திருந்தது.

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு, பதில் பிரேரணைகளை முன்வைக்கும் போது, மின்சாரக் கட்டணத்தை 10 முதல் 20 வீதம் வரை குறைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதாகக் குறிப்பிட்டிருந்தது.

இந்த முன்மொழிவுகள் தொடர்பில் எழுத்துமூலம் பொதுமக்களின் கருத்துக்களைப் பெறும் நடவடிக்கை கடந்த 17ஆம் திகதி ஆரம்பமானதுடன், வாய்மூல அமர்வுகள் எதிர்வரும் 27ஆம் திகதி கண்டி பிரதேசத்தில் ஆரம்பிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

வாய்மொழி மூலமும் எழுத்து மூலமும் கருத்துக்களைப் பெற்ற பின்னர் ஜனவரி 17ஆம் திகதி தனது இறுதி அறிக்கையை சமர்ப்பிக்கவுள்ளதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தொடர்பாடல் திணைக்களத்தின் பணிப்பாளர் ஜயநாத் ஹேரத் தெரிவித்தார்.

### வாழைச்சேனை...

செயலகத்தின் முன்னாள் உத்தியோகத்தர்கள் நேற்று திங்கட்கிழமை (23) கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கோறளைப்பற்று வாழைச்சேனை பிரதேச செயலகத்தில் கடமையாற்றிவரும் கிராம உத்தியோகத்தர் கடந்த 20 ம் திகதி கடமை நிமித்தம் தனது பிரதேசத்திற்கு சென்று வரும் போது சில நபர்களினால் தாக்கப்பட்டதையடுத்து அவர் காயமடைந்த நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு தாக்குதல் மேற்கொண்டவர்களை பொலிஸார் கைது செய்யவில்லை என தெரிவித்து இந்த தாக்குதலை கண்டித்தும் சட்டநடவடிக்கை எடுக்க கோரியும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் பிரதேச செயலகத்தின் முன்னாள் ஒன்று திரண்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனையடுத்து அங்கு வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி வசந்த பண்டார சென்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் கலந்துரையாடினார்

இதனைத் தொடர்ந்து ஆர்பாட்டகாரர்கள் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியிடமும் பிரதேச செயலாளரிடமும் மகஜர் ஒன்றைக் கையளித்தனர். குறித்த சந்தேகநபர் தலைமறைவாகியுள்ளதாகவும் அவரை கைது செய்து நீதிமன்றில் முன்னிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் பொறுப்பதிகாரி ஆர்ப்பாட்டக்காரர்களிடம் உறுதிமொழி வழங்கியதையடுத்து அவர்கள் அங்கிருந்து கலைந்து சென்றனர்.

### 13 வகையான ...

தலைவர் வைத்தியர் சமல் சஞ்சீவ தெரிவித்துள்ளார். கடந்த வாரம் எட்டு மருந்து வகைகளும், இந்த வாரம் ஐந்து மருந்து வகைகளும் இவ்வாறு பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட்டுள்ளதாகத் தெரிவித்த அவர், கடந்த வாரம் நீக்கப்பட்ட 8 மருந்து வகைகள் தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு செய்துள்ளதாகவும் தெரிவித்தார்.

அந்த மருந்து வகைகளை இறக்குமதி செய்தவர்கள் தொடர்பில் விசாரணை நடத்துமாறு முறைப்பாட்டில் கோரப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த மூன்று வருடங்களில் மாத்திரம் சுமார் 300 மருந்து வகைகள் பாவனையிலிருந்து விலக்கப்பட்டுள்ளதாகவும் நிமோனியா, மூளைக் காய்ச்சல் உள்ளிட்ட பல தொற்று நோய்களுக்குப் பயன்படுத்தப்படும் மருந்துகள் இருப்பதாகவும் சமல் சஞ்சீவ தெரிவித்தார். ஒவ்வொரு வாரமும் இவ்வாறு மருந்து தரமின்மை காரணமாக மருந்து வகைகள் அகற்றப்படுவதாகவும், ஆனால் இந்த மருந்துகளை இறக்குமதி செய்வது தொடர்பில் பணியாற்றிய அதிகாரிகள் மற்றும் தரமற்ற மருந்து வகைகளை அடையாளம் காண்பது தொடர்பில் சுகாதார அமைச்சினால் முறையான வேலைத்திட்டமொன்றை முன்னெடுக்க முடியவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஒவ்வொரு வாரமும் தரம் குறைந்த மருந்துகளை இவ்வாறு அகற்றுவதனால் நாட்டின் திறைசேரிக்கு பாரிய பாதிப்பை ஏற்படும் எனவும் தற்போதைய சுகாதார அமைச்சர் இவ்விடயங்கள் தொடர்பில் உடனடி கவனம் செலுத்த வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்தார்.

### டிஜிடல்...

ப்படவுள்ளதாக வெளியுறவு அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க இந்தியாவுக்கு விஜயம் செய்தபோது இந்தியாவில் வெற்றிகரமாக செயற்படும் மக்களை மையமாகக் கொண்ட டிஜிட்டல் மயமாக்கல் திட்டங்கள் தொடர்பாக கலந்துரையாடினார்.

இதற்கு பதிலளிக்கும் விதமாக, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, இலங்கையின் முயற்சிகளுக்கு உதவ இந்தியா தயாராக இருப்பதாகவும் இலங்கையில் டிஜிட்டல் அடையாள அட்டை திட்டத்தை விரைவாக செயற்படுத்த ஒப்புக்கொண்டதாகவும் ஹேரத் தெரிவித்துள்ளார்.

இந்தத் திட்டத்தில் ஊழல் குறைவாக இருக்கும். அத்துடன் இது மில்லியன் கணக்கான மக்களுக்கு பயனளித்த இந்தியாவின் ஆதார் அட்டையைப் போன்றது என தெரிவித்த அமைச்சர் விஜித ஹேரத், இந்தியாவில் அரசத் துறையின் மிகவும் வெற்றிகரமான டிஜிட்டல் மயமாக்கல் உலகளவில் பாராட்டைப் பெற்றுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் கீழ் வரும் டிஜிட்டல் பொருளாதார விவகார அமைச்சகமும் தகவல் தொடர்பு தொழில்நுட்ப நிறுவனமும் இந்திய அரசாங்கத்துடன் இணைந்து இந்தத் திட்டத்தை செயற்படுத்தும்.

இது தொடர்பான முன்னெடுப்புகளை மேற்கொள்ள இந்திய அரசாங்கக் குழு அடுத்த மாதம் இலங்கைக்கு வருகை தர உள்ளது. இதன்படி, புதிய அரசாங்கம் பதவியேற்ற பின்னர் ஆரம்பமாகும் முதல் இந்திய முதலீட்டுத் திட்டம் இதுவாக இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

### போர்கள்...

போர்கள் நிறுத்தப் பட வேண்டும் என வலியுறுத்தினார்.

இதுதொடர்பாக இத்தாலியின் வர்த்திக்கா நகரில் உள்ள புனித பீட்டர் தேவாலயத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற சிறப்புத் திருப்பலியில் "உக்ரேன் நகரங்கள் தொடர்ந்து தாக்குதலுக்குள்ளாகி வருகின்றன. இந்தத் தாக்குதல்களில் சில நேரங்களில் பள்ளிகள், மருத்துவமனைகள் மற்றும் தேவாலயங்கள் சேதமடைகின்றன. காஸாவில் குரூரமான தாக்குதல் நடத்தப்படுகிறது. துப்பாக்கிச்சூட்டில் குழந்தைகள் உயிரிழக்கின்றனர். பள்ளிகள், மருத்துவமனைகள் மீது குண்டுகள் வீசப்படுகின்றன. கிறிஸ்மஸ் பண்டிகையின்போது உலகில் நடைபெறும் போர்கள் நிறுத்தப்பட வேண்டும் என அனைவரும் பிரார்த்தனை செய்வோம்" என்று தெரிவித்தார்.

ரோமன் கத்தோலிக்க திருச்சபையின் 140 கோடி உறுப்பினர்களுக்குத் தலைவராக உள்ள போப் ஃபிரான்சிஸ், போர்களில் எந்தப் பக்கத்துக்கு ஆதரவாக இருந்து பேசுவது என்பதில் மிகுந்த கவனத்துடன் இருப்பதே வழக்கம். ஆனால், உக்ரேன்-ரஷ்யா போர், காஸா மீதான இஸ்ரேலின் தாக்குதல் குறித்து அண்மைக் காலமாக அவர் மிக வெளிப்படையாக பேசுவது குறிப்பிடத்தக்கது.

### ஏட்டிக்கு போட்டி

வண்ணம் உள்ளன. "பீஸ் ஆர்க்" என்ற சீனக் கப்பல் கொழும்பு துறைமுகத்தில் நங்கூரமிடப்பட்டுள்ள பின்னணியில் நேற்றைய தினம் இரு இந்திய கப்பல்கள் இலங்கையை வந்தடைந்துள்ளன.

இந்திய கடலோர காவல்படைக்கு சொந்தமான "அபிராஜ்" மற்றும் "வைபவ்" ஆகிய இரு கப்பல்கள் நேற்று (23) கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளதாக இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்த இந்த இரண்டு இந்திய கப்பல்களும் காலி துறைமுகத்தை நோக்கி பயணிக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாக உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

இந்திய கடலோர காவல்படை கமாண்டர் நவ்தேஜ் சிங் சோஹல் மற்றும் கமாண்டர் எஸ். சுஜித் , இலங்கை கடலோர காவல்படையின் பணிப்பாளர் நாயகம் மற்றும் ஏனைய உயர் அதிகாரிகளை சந்திக்க உள்ளனர்.

இந்த விஜயத்தின் போது, தீயை அணைத்தல் மற்றும் சேதத்தை கட்டுப்படுத்துதல், கடல் மாசுபாட்டை எதிர்த்தல் போன்றவற்றில் ஒருங்கிணைந்த பயிற்சி அளிக்கப்படும் எனவும் கூறப்படுகிறது.

இங்கு, இலங்கையில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயம் இந்திய கடலோரக் காவல்படை மற்றும் அதன் திறன்கள் குறித்து மக்களுக்குக் கற்பிக்க எதிர்பார்த்துள்ளது.

கடல்சார் பாதுகாப்பு சவால்களை திறம்பட எதிர்கொள்வதற்கும் இலங்கை கடலோரக் காவல்படையின் திறன்களை மேம்படுத்துவதற்கும் இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான ஒத்துழைப்பை இந்த விஜயங்கள் வெளிப்படுத்துவதாக இந்திய உயர்ஸ்தானிகராலயம் மேலும் தெரிவித்துள்ளது.

இந்த இரண்டு இந்தியக் கப்பல்களும் டிசம்பர் 27ஆம் திகதி நாட்டை விட்டுப் புறப்பட உள்ளன.

இலங்கைக்கு வருகைத்தரும் சர்வதேச கப்பல்களுக்கு அனுமதியளிக்கும் தேசிய கொள்கையொன்றை உருவாக்க அரசாங்கம் தீர்மானித்துள்ள பின்னணியில் இந்திய, சீன கப்பல்கள் இலங்கைக்கு வருகை தருவது பிராந்திய ரீதியிலான கேள்விகளை எழுப்பி வருகின்றன.

### இஸ்ரேலிய...

இந்நிலையில், பெல்ஜியத்தை தளமாகக் கொண்ட ஹிந்த் ரஜப் அறக்கட்டளை, (The Hind Rajab Foundation) அவரை கைது செய்யுமாறு இலங்கை அதிகாரிகள், சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் மற்றும் சர்வதேச பொலிஸாரிடம் முறைப்பாடு செய்திருந்தது.

கடந்த ஒகஸ்ட் ஒன்பதாம் திகதி தனது இன்ஸ்டாகிராம் கணக்கில் பாலஸ்தீன குடிமகளை கொன்று, அதுகுறித்து பெருமையுடன் சிரித்துப் பேசும் காணொளியை ஃபிரென்புக் வெளியிட்டுள்ளார்" என்று ஹிந்த் ரஜப் குறிப்பிட்டுள்ளது.

ஆகையினால், இலங்கை அதிகாரிகள், சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் மற்றும் சர்வதேச பொலிஸார் விரைவான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அந்த அறக்கட்டளை அழைப்பு விடுத்திருந்தது.

இந்நிலையிலேயே, ஃபிரென்புக் கொழும்பில் இருப்பதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் தங்களுக்கு எந்த உறுதியான தகவலும் கிடைக்கவில்லை என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையில், இலங்கையில் இருப்பதாகக் கூறப்படும் ஃபிரென்புக்கைக் கைது செய்ய வலியுறுத்தி, கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பில் உள்ள அமெரிக்க தூதரகத்திற்கு வெளியே போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

சுதந்திர பாலஸ்தீன இயக்கம் மற்றும் ஐக்கிய தொழிலாளர் கூட்டமைப்பு இணைந்து இந்த கூட்டுப் போராட்டத்தை நடத்தியிருந்தன.

ஹிந்த் ரஜப் அறக்கட்டளையின் அறிக்கைகளைத் தவிர, இந்தக் கூற்றை உறுதிப்படுத்தும் அதிகாரப்பூர்வ அறிக்கைகள் எதுவும் இல்லை என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் புத்திக மனதுங்க தெரிவித்துள்ளார்.

உள்ளூர் அதிகாரிகளிடம் முறைப்பாடு செய்துள்ளதாக அந்த அமைப்பு குற்றம் சாட்டிய போதிலும், இந்தக் கூற்றுக்களை உறுதிப்படுத்தும் எந்த ஆதாரமும் பொலிஸா ருக்கு கிடைக்கவில்லை என்று செய்தித் தொடர்பாளர் கூறினார்.

## வடக்கு ஆளுநர் -யாழ்.கட்டளைத் தளபதி சந்திப்பு

வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், யாழ். மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதியாக பொறுப்பேற்றுள்ள மேஜர் ஜெனரல் யசுமபத் நேற்று திங்கட்கிழமை



(23) ஆளுநர் செயலகத்தில் சம்பிரதாயபூர்வமாகச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இருவரும் பரஸ்பரம் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டனர். அத்துடன் ஆளுநர் நா.வேதநாயகன், யாழ். மாவட்டச் செயலராகப் பணியாற்றிய காலத்தில் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் யசுமபத்தும் யாழ். மாவட்;டத்தில் பணிபுரிந்தமையை நினைவுகூர்ந்தார்.

### உள்ளூராட்சி...

ஏற்படுத்துவதில் மாத்திரம் அவதானம் செலுத்தியுள்ளதாக அந்த தகவல்கள் குறிப்பிட்டுள்ளன.

ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அரசியல் சபை மற்றும் நிறைவேற்று குழு அண்மையில் கூடி, இந்த விடயங்கள் தொடர்பில் விரிவாக ஆராய்ந்துள்ளது.

அங்கு எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தனித்து போட்டியிடுவதே பொருத்தமானது என அக்கட்சியில் பலரும் கருத்து வெளியிட்டுள்ளனர்.

அத்துடன், பொதுத் தேர்தலின் போது கட்சியில் இருந்து விலகியவர்களை மீண்டும் இணைத்துக்கொள்வது தொடர்பிலும் அண்மையில் நடைபெற்ற நிறைவேற்று குழுவில் நீண்ட நேரம் கலந்துரையாடப்பட்டதாக கூறப்படுகிறது.

இதன்போது இரண்டு கருத்துக்கள் முன்வைக்கப்பட்ட போதிலும் மீண்டும் அவர்களை தொடர்பு கொள்வது பொருத்தமானது என பலர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஆனால், மற்றொரு குழு இதற்கு நேர்மாறான கருத்துக்களை தெரிவித்துள்ளதாகவும் அரசியல்

### கலாநிதி பட்டம்...

இருந்து அனுப்பப்பட்ட கடிதத்தில் "கலாநிதி" என்று குறிப்பிடப்பட்டதன் அடிப்படையில் நாடாளுமன்ற இணையதளத்தில் தரவுகள் உள்ளிடப்பட்டதாக அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. நாடாளுமன்ற விவகாரங்களுக்கான குழுவின் உறுப்பினராக ஹர்ஷன நாணயக்கார பெயரிடப்பட்டு, அவருடைய பெயருக்கு முன்னால் "கலாநிதி" என்று குறிப்பிட்டு அந்தக் கடிதம் அனுப்பப்பட்டதாக அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை, அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார மேற்கொண்ட முறைப்பாட்டின் பிரகாரம், இந்த சம்பவம் தொடர்பில் குற்றப்புலனாய்வு திணைக்களம் நாடாளுமன்றத்தின் மூன்று அதிகாரிகளிடமும் விசாரணைகளை மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### மின்னொளியில்...

அலுவலக வளாகம் மற்றும் அதனைச் சூழவுள்ள பகுதிகள் மின்னொளியால் அலங்கரிக்கப்பட்டிருந்ததோடு இராணுவத்தின் பாடல் குழு மற்றும் இசைக்குழுவினரால் நேற்றைய தினம் நத்தார் கரோல் கச்சேரி நிகழ்த்தப்பட்டது.

இந்த கிறிஸ்மஸ் கரோல் இசை நிகழ்ச்சி நாளை 25 ஆம் திகதி வரை தினமும் இரவு 7.00 மணி முதல் ஜனாதிபதி செயலக வளாகத்தில் இடம்பெறவுள்ளது.

### முன்னாள்...

முப்படை வீரர்கள் நீக்கப்பட்டாலும், முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பில் எவ்வித பிரச்சினையும் ஏற்பட இடமளிக்கப்பட மாட்டாது என பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பிற்காக நியமிக்கப்பட்ட அதிகாரிகளின் அதிக செலவு காரணமாக அவர்களின் பாதுகாப்பிற்காக நியமிக்கப்பட்ட அதிகாரிகளின் எண்ணிக்கையை குறைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

சப்ரகமுவ மாகாணத்தில்

# 154 பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனம்




சப்ரகமுவ மாகாணத்தில் புதிதாக 154 பட்டதாரிகளுக்கு நேற்று (23) ஆசிரியர் நியமனங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று (23) சப்ரகமுவ மாகாண ஆளுநர் சம்பா ஜானகி ராஜரத்ன தலைமையில் சப்ரகமுவ மாகாண சபையின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இலங்கையின் ஆசிரியர் சேவைக்கு சப்ரகமுவ மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவினால் இவ்வருடம் (07.04.2024) நடாத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் இந்த ஆட்சேர்ப்புகள் இடம்பெற்றுள்ளது. இந்நிகழ்வில் பெருந்தோட்ட சமூக அபிவிருத்தி பிரதியமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப், இரத்தினபுரி மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சாந்த பத்மகுமார, இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ராஜபக்ஷ, சப்ரகமுவ மாகாண சபையின் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் புஷ்பகுமார திஸாநாயக்க ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

# மாலம்பே -அம்பத்தளை பாதையில் விசேட பாதுகாப்பு ஏற்பாடு

மேல்மாகாண ஆளுநர் நடவடிக்கை




திருடர்களின் கைவரிசையும் நடமாட்டமும் அதிகரித்துள்ளதாக மாலம்பே தொடக்கம் அம்பத்தளை வரையிலுள்ள சந்திரிகா குமாரதுங்க மாவத்தையில் விசேட பாதுகாப்பு வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு மேல்மாகாண ஆளுநர் ஹனீப் யூசுப் பொலிசார் உள்ளிட்ட அதிகாரிகளுக்கு நேற்று பணிப்புரை விடுத்துள்ளார்.

இவ்வீதியில் பயணிக்கும் வாகனங்களை கூட திருடர்கள் கொள்ளையடிப்பதாக அப்பகுதி மக்களிடம் இருந்து கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் அடிப்படையில் ஆளுநர் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார். சந்திரிகா குமாரதுங்க மாவத்தையைச் சுற்றியுள்ள பகுதிகளில் பொலிஸ் ரோந்துப் பணிகளை அதிகரிக்கவும், வீதியின் நுழைவாயிலின் இருபுறமும் பாதுகாப்பை பலப்படுத்துமாறு ஆளுநருக்கும் பொலிஸ் அதிகாரிகளுக்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் இணக்கம் காணப்பட்டுள்ளது. அத்துடன் சிசிடிவி கெமராக்களை மின்கம்பங்களை நிறுவுதல் மற்றும் குறித்த பகுதியில் பொலிஸ் சோதனைச் சாவடிகள் அமைப்பது போன்றன கலந்துரையாடப்பட்டன.

நகர அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் உள்ள இந்த பிரதேசத்தை முல்லேரிய மற்றும் மாலம்பே உள்ளூராட்சி சபைகளுக்கு மாற்றுவது தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது.

# திலித்துடன் இணைந்தார் எஸ். எம். சந்திரசேன



பொதுஜன பெரமுனையின் முக்கிய முன்னாள் அமைச்சர் எஸ். எம். சந்திரசேன நேற்று (23) சர்வஜன சக்தியின் அங்கத்துவத்தைப் பெற்றுக்கொண்டார். சர்வஜன சக்தி கட்சியின் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் திலித் ஜயவீரவிடமிருந்து கட்சி உறுப்புரிமையைப் பெற்றுக்கொண்டதுடன், பிரபஞ்ச சக்தியின் தலைமைத்துவ சபைக்கு சந்திரசேனவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

எஸ்.எம் சந்திர சேனா 2001 முதல் 2024 வரை அநுராதபுர மாவட்டத்தில் இருந்து நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தியதுடன் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அரசாங்கத்தில் பல அமைச்சுப் பதவிகளையும் வகித்துள்ளார். புதிய ஜனநாயகக் கட்சியில் இணைந்து கடந்த பொதுத் தேர்தலில் போட்டியிட்டார்.

# திருமலை மாவட்ட செய்தியாளர்களுக்கு இலவச பஸ் பாஸ்

(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை மாவட்டத்திலிருந்து செயற்படும் செய்தியாளர்களுக்கு,மாவட்டத்திற்குள் தனியார் துறை பஸ்களில் பயணம் செய்வதற்குரிய இலவச அனுமதி பத்திரங்கள் வழங்க,கிழக்கு மாகாண தனியார் வீதிப்போக்குவரத்து அதிகார சபை இணக்கம் தெரிவித்துள்ளது.

கிழக்கு மாகாண தனியார் வீதிப்போக்குவரத்து அதிகார சபைத்தலைவர் பீ.ஆர்.பி.கித்சிறி நவரெட்ணவிற்கும்,திருகோணமலை கந்தலாவ ஐக்கிய ஊடகவியலாளர் சங்க பிரதான நிர்வாகிகளுக்கிடையில் நேற்று(23)நடைபெற்ற கலந்துரையாடலின் போது மேற்படி இணக்கம் தெரிவிக்கப்பட்டது.

ஊடக மன்றத்தின் தலைவர் அமதோரு அமரஜீவ,அமைப்பாளர் கிஹாஸ் ஷாபி,பொருளாளர் எஸ். கீதபொன்கலன்,உப செயலாளர் யூசூப் அடங்கிய நிர்வாகிகள் மாகாண வீதிப்போக்குவரத்து அதிகாரசபை அலுவலகத்தில் வைத்து நேற்று மேற்படி விடயம் தொடர்பான எழுத்து மூல கோரிக்கையை முன்வைத்து கலந்துரையாடினர்.

இக்கலந்துரையாடலில்,மாகாண வீதிப்போக்குவரத்து அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் டபிள்யூ.எம்.எச். உதயகுமாரவும் கலந்து கொண்டிருந்தார்.

மாவட்டத்திற்குள் மட்டுமல்லாது அதற்கு மேலதிகமாக மாகாணம் முழுவதும் பயணம் செய்யக்கூடிய வகையில் தற்காலிக இலவச பயண அனுமதி பத்திரமும் வழங்கப்படும்.இது ஊடக நிகழ்வுகளின் போது மட்டும் பயன்படுத்த கூடிய வகையில் வழங்கப்படும். இது தற்காலிகமானது, நிகழ்விற்கு சென்று வர மட்டுமே பயன்படுத்தப்படலாம்.ஆனால் நிகழ்வில் பங்குபற்றவுள்ள செய்தியாளரின் பெயர் குறிப்பிட்டு உறுதிப்படுத்தல் கடிதம் ஊடக சங்க தலைவரால்,போக்குவரத்து அதிகார சபைத்தலைவருக்கு எழுத்து மூலம் முன்வைக்கப்பட வேண்டும் எனவும் கலந்துரையாடலின் போது தீர்மானிக்கப்பட்டது.

## உங்கள் ராசிபலன் எப்படி

குரோதி வருடம் மார்கழி மாதம் 09ஆம் நாள் செவ்வாய்க்கிழமை

**மேஷம்:** இன்றைய நாள் நீங்கள் விரும்பத்தக்கதாக இருக்கும். உங்கள் இலக்குகளை எளிதில் அடைவீர்கள்.

**ரிஷபம்:** இன்றைய நாள் சுமூகமாகவும் வெற்றிகரமாகவும் அமைய நீங்கள் திட்டமிட்டு செயலாற்ற வேண்டும்.

**மிதுனம்:** இன்றைய நாள் பயனுள்ளதாக இருக்காது. உங்களுக்கு விருப்பமான விஷயங்களை செய்யுங்கள்.

**கடகம்:** இன்று உங்கள் முயற்சிகளில் வெற்றி உங்களுக்கு சாதகமாக அமையும் நாள். மிகவும் அற்புதமான நாள்.

**சிம்மம்:** எந்த விஷயத்தையும் இலகுவாக எடுத்துக்கொள்ள வேண்டும். இன்று பொறுமை அவசியம்.

**கன்னி:** இன்று நீங்கள் முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

**துலாம்:** நீங்கள் அதிகப்படியாக செயலாற்றினால் வெற்றியைக் காண நேரலாம்.

**விருச்சிகம்:** இன்று இனிமையான சாதகமான நாள். இன்று நல்ல பலன்களைக் காண்பீர்கள்.

**தனுசு:** இன்று உங்களுக்கு சிறப்பான நாள். உங்கள் அக்கம் பக்கத்தவரின் ஆதரவு கிடைக்கும்.

**மகரம்:** இன்று இறை வழிபாட்டில் ஈடுபடுங்கள். முக்கிய முடிவுகள் எடுப்பதை வேறு ஒரு நாளைக்கு தள்ளிப்போடுங்கள்.

**கும்பம்:** இன்று சிறப்பான பலன்கள் கிடைக்காது என்றாலும் அமைதியாக செயல்களை கையாலவேண்டும்.

**மீனம்:** இன்று முக்கிய முடிவுகளை எடுக்கலாம். இன்று அதிர்ஷ்டம் உங்கள் பக்கம் இருக்கும்.

## இன்றைய பஞ்சாங்கம்

**திதி:** இன்று இரவு 08:54 வரை நவமி பின்பு தசமி.
**நட்சத்திரம்:** இன்று பிற்பகல் 01:49 வரை அஸ்தம் பின்பு சித்திரை.
**யோகம்:** சித்த.
**சந்திராஷ்டமம்:** அவிட்டம்,சதயம்.
**சூலம்:** கிழக்கு.
**இராகு காலம்:** 03:00 PM முதல் 04:30 PM வரை.
**குளிகை:** 12:00 PM முதல் 01:30 PM வரை.
**எமகண்டம்:** 09:00 AM முதல் 10:30 AM வரை.

# சிறுபான்மையினர் இல்லாத அரசின் ‘கிளீன் ஸ்ரீலங்கா’

ஸ்ரீநேசன் சாடல்

(வெல்லாவெளி நிருபர்)



ஜனாதிபதி தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் ‘கிளீன் ஸ்ரீலங்கா’ என்னும் ஆணைக்குழுவானது ஜனாதிபதியின் செயலாளர் தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது. இதில் 18 உறுப்பினர்கள் உள்ளனர். அந்த 18 உறுப்பினர்களும் பெரும்பான்மை இனத்தவர்களாகவே உள்ளனர். தமிழர்களோ முஸ்லிங்களோ அதில் இல்லை. என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து சிறிநேசன் தெரிவித்துள்ளார். இவ்விடயம் தொடர்பில் அவர் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

பல்லின சமூகங்கள் உள்ள இலங்கையில் தமிழ் பேசும் சமூகத்தவர்கள் இடம்பெறாத நிலைப்பாடு தமிழ் பேசும் சமூகத்தவர் மத்தியில் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

எனவே, ஜனாதிபதி அநுரவும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கமும் அடிப்படைவாதமற்ற தன்மையை ஆரம்பத்தில் இருந்தே உறுதிப்படுத்த வேண்டும்.

எது எப்படியாக இருந்தாலும் 75 ஆண்டுகளாக அடிப்படைவாதம், ஊழல், மோசடிகள், திருட்டுகள், இலஞ்சம் என்பவற்றால் நாசமாக்கப்பட்ட இந்நாட்டை சுத்தம் செய்ய வேண்டிய தேவை அவசியமானதாகும். சுத்தப்படுத்த வல்ல தமிழர்,முஸ்லிம் பிரசைகளும் இலங்கையில் உள்ளனர் என்பதை ஜனாதிபதி அநுர அவர்கள் நினைவில் கொண்டு, செயலாற்ற வேண்டும். என அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

# புதிய அரசியலமைப்பில் சுகாதாரத்துறைக்கு முக்கியத்தும்

அமைச்சர் நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவிப்பு



புதிய அரசியலமைப்பில் மக்களின் அடிப்படை மனித உரிமையான சுகாதாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கான வழிமுறையை வகுக்க உள்ளதாகச் சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் டொக்டர் நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அந்த உரிமையை மீறும் பட்சத்தில் நீதிமன்றத்தை நாடுவதற்கு மக்களுக்கு இது உதவும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

அகில இலங்கை சிறுநீரக நோயாளர் சங்கத்தின் வருடாந்த சமூகப் பாதுகாப்பு நிகழ்வில் கலந்து கொண்ட சுகாதார மற்றும் ஊடகத்துறை அமைச்சர் டொக்டர் நலிந்த ஜயதிஸ்ஸ இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வு கொழும்பு மகாவலி கேந்திர நிலையத்தில் நேற்று நடைபெற்றது. நீண்ட வரலாற்றைக் கொண்ட இலங்கையின் சுகாதார சேவையானது மிக விரைவாகக் கட்டமைப்பு ரீதியான மாற்றப்பட வேண்டும் என்றும் அமைச்சர் கூறினார்.

# வாகன டயர்களை சேதப்படுத்தி திரிலான கொள்ளை சம்பவங்கள்

மாலபே சந்திரிகா குமாரதுங்க மாவத்தை அம்பத்தளைக்கு செல்லும் வழியில் இரவு நேரங்களில் வீதியில் ஆணியடித்த பலகைகளை வைத்து கொள்ளையர்கள் வாகனங்களில் வருபவர்களிடம் பணம், பொருட்கள் திருடுவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இரவு நேரங்களில் குறித்த வீதியில் இருள் சூழ்ந்துள்ளதால் வாகனங்களின் டயர்களை சேதப்படுத்தி, நடுவில் பெரிய கருங்கற்களை வைத்து வழிப்பறி கொள்ளையில் ஈடுபடுகின்றனர். இது குறித்து அப்பகுதியில் கடைகள் நடத்தும் வியாபாரிகளிடம் கேட்டபோது, இந்த சாலையில் தெருவிளக்குகள் பொருத்தப்படாததாலும், பொலிஸாரின் ரோந்து பணிகள் இல்லாததால் இதுபோன்ற கொள்ளை சம்பவங்கள் அதிகம் நடைபெற முக்கிய காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கொள்ளையர்கள் பல்வேறு ஆயுதங்களுடன் வந்து கொள்ளையிட்டு காட்டுப்பகுதிக்கு தப்பிச் செல்வதாக அப்பகுதி மக்கள் கூறுகின்றனர்.

இது தொடர்பில், மாலபே – அம்பத்தளை சந்திரிகா குமாரதுங்க மாவத்தைக்கு சொந்தமான முல்லேரிய மற்றும் மாலபே பொலிஸ் நிலையங்களிலிருந்து மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், அவ்வாறான தகவல்கள் கிடைத்துள்ள போதிலும், முறைப்பாடுகள் எதுவும் கிடைக்கவில்லை.

# தாய்லாந்தில் 40 பதக்கங்கள் பெற்ற இலங்கை வீரர்கள்




தாய்லாந்தில் நடைபெற்ற இளையோர் குறுந் தூர படகுப்போட்டியில் கலந்து கொண்ட இலங்கை வீராங்கனைகள், பெண்களுக்கான போட்டிகளில் 16 தங்கப் பதக்கங்களையும், 10 வெள்ளிப் பதக்கங்களையும், 10 வெண்கலப் பதக்கங்களையும், ஆண்கள் பிரிவில் 4 தங்கப் பதக்கங்களையும், 6 வெள்ளிப் பதக்கங்களையும், 1 வெண்கலப் பதக்கத்தையும் வென்றுள்ளனர்.

மேலும், இளையோர் கேயாக் போட்டியில் இலங்கை ஆண்– பெண் வீரர்கள் இரு தங்கப் பதக்கத்தை வென்றுள்ளனர். இந்தப் போட்டியில் பாகிஸ்தான், சீனா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், இந்தியா, மலேசியா, தாய்லாந்து மற்றும் ஹாங்காங், சீனா ஆகிய நாடுகளைச் சேர்ந்த 125க்கும் மேற்பட்ட போட்டியாளர்கள் கலந்து கொண்டனர்.

ஐக்கிய அரபு எமிரேட்ஸ், பாகிஸ்தான், மலேசியா மற்றும் சீன வீரர்களின் கடும் போட்டியை எதிர்கொண்டு இலங்கை வீரர்கள் இந்த வெற்றியைப் பெற்றுள்ளனர்.

தாய்லாந்தின் புட்டமொண்டன் மாவட்டத்தில் கடந்த 14 மற்றும் 15ஆம் திகதிகளில் போட்டிகள் நடைபெற்றன.

# ஒருவனின் நோக்கில்...

No. 752/5, Dr Danister De Silva Mawatha,
Second Floor, Bellatrix Building, Colombo 09
0114701510 / editorial@oruvan.com

## 'கிளீன் ஸ்ரீலங்கா' அரசை தூய்மைப்படுத்துமா?...

அரச நிர்வாகத்தை முடக்கி மக்களை நெருக்கடிக்குள் திணிக்கும் மாபியாக்களின் வக்கிர புத்திகளுக்கு பதிலளிக்கும் வகையில், 'கிளீன் ஸ்ரீலங்கா' என்ற பெயரில் புதிய திட்டம் ஒன்றை அரசாங்கம் அறிமுகப்படுத்துகிறது.

இதற்கென 18 பேருள்ள குழு அமைக்கப்பட்டு வர்த்தமானியும் வெளியிடப்பட்டது. இம்மாதம் 19ஆம் திகதி (19-12-2024) வெளியான இவ் வர்த்தமானியில், ஜனாதிபதியின் செயலாளர் நந்திக்க சனத் குமாநாயக்க ஒப்புமிட்டு இருக்கிறார். முப்படைகளின் தளபதிகள், பதில் பொலிஸ் மா அதிபர் மற்றும் நகர அபிருத்தி சபையின் தலைவர் உள்ளிட்டோரை உள்ளடக்கி இக்குழு நியமிக்கப்பட்டுள்ளது.

அரச சேவைகள் மக்களை முறையாகச் சென்றடைதல், ஊழல், மோசடிகளை ஒழித்தல், அரசாங்கத்தின் இலட்சியங்களை அடைவதற்கான நோக்கங்களை கண்காணித்தல், அலுவலகங்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்படும் சேவைகள் மக்களுக்கு திருப்தியளிப்பதை உறுதிப்படுத்தல், அரச சேவையாளர்கள், அதிகாரிகளின் செயற்பாடுகளால் மக்களுக்கு ஏற்படும் பாதக மற்றும் சாதக விளைவுகளை கண்டு கொள்ளல் உள்ளிட்ட பல நோக்கங்களுடன் இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 'தூய்மையான இலங்கை' என்ற அடைமொழிக்குள் வரும் இந்த 'கிளீன் ஸ்ரீலங்கா'

அரச இயந்திரத்தின் செயற்பாடுகளை தூய்மைப்படுத்தும் நோக்கில் அமுலாகவுள்ளது. பதுக்கல் வியாபாரம், செயற்கைத் தட்டுப்பாடு, அரசியல் நோக்கிலான ஆர்ப்பாட்டங்கள் மற்றும் இலஞ்ச, ஊழல் செயற்பாடுகளை ஒழிப்பதற்கு இத்திட்டம் முதலிடம் வழங்கவுள்ளது. மக்களைச் சிரமங்களுக்குள்ளாக்கும் எந்தச் செயற்பாடுகளையும், எந்த வகையிலும் அனுமதிப்பதில்லை. இவைகள் எல்லாம் முதலாளித்துவ மேலாதிக்கவாதிகளின் சந்தர்ப்பவாத சிந்தனைகள் என்றே அரசாங்கம் கருதுகிறது. அரிசி மற்றும் தேங்காய்களுக்கு அண்மையில் நிலவிய தட்டுப்பாடுகள், அரசியல் மாபியாக்களாலே ஏற்படுத்தப்பட்டன என்பதை அரசு கண்டறிந்துள்ளது. ஆழ, அகலமாக நடத்தப்பட்ட அரச விசாரணைகளில் இது வெளிச்சத்துக்கும் வந்துள்ளது.

இதை விடவும், உப்புக்கும் தட்டுப்பாடு வரலாமென வந்த செய்திகளே பலரையும் ஆச்சரியப்படுத்தியது. கடல் நீரை சிரட்டையில் அள்ளியெடுப்பதால், கடல் வரண்டு விடப்போவதில்லையே...! உப்பில்லாப் பண்டம் குப்பையில்தான். நாக்கில் தொட்டு வைக்கும் அளவு பாவிக்கப்படும் இந்த உப்புக்கு, தட்டுப்பாடு ஏற்படுவது எப்படி...? இதில்தான் சந்தேகம் எழுந்தது. உப்பு உற்பத்திக்கு சாதாரணமாக ஆறு மாதங்கள் உஷ்ண நிலை அவசியம். கடந்த காலங்களில் தொடரான மழை ஏற்பட்டதால், உற்பத்திகள் பாதிப்படைந்திருக்கலாம். இருந்தாலும் தட்டுப்பாடு ஏற்படுமளவுக்கு நிலைமைகள் மாறுமா?...

இவையெல்லாம் மக்களைக் குழப்பும் அல்லது சந்தேகத்துக்குள் திணிக்கும் ஒரு வகையான அரச எதிர்ப்புச் செயற்பாடுகளாகவே உள்ளன. மொத்த இறக்குமதியாளர்களை பிடிக்குள் வைத்துள்ள சில, சக்திகள் அரசியல் அல்லது வியாபார நோக்கில் இவர்களை இயக்குவதாகவே அரசாங்கம் சந்தேகிக்கிறது. மக்களை வீதிக்கு இறக்கி அரச நிர்வாகத்தை முடக்குவதற்கு முயற்சிக்கப்பட்டதா? என்ற கோணத்திலும் விசாரணைகள் முடுக்கப்படலாம். பாம்பின் காலை பாம்புதானே அறியும். காலிமுகத்திடல் ஆர்ப்பாட்டங்களை இயக்கிய சக்திகளுக்கு சட்டத்திலுள்ள சந்து, பொந்துகள் தெரியாமலிருக்காது. என்னவாயினும், அமோக ஆதரவுடன் ஆட்சிபீடமேறிய அரசை, வீழ்த்துவதற்கு சிலர் அவசரப்படுவது அல்லது அவசரப்பட்டது போலவே கள நிலவரங்கள் கட்டியம் கூறுகின்றன.

இப்போது தேங்காய்க்கோ அல்லது அரிசிக்கோ தட்டுப்பாடோ அல்லது பற்றாக்குறையோ நிலவுவதாகத் தெரியவில்லை. இதுவரைக்கும் நிலவியிருக்குமானால் பொதி செய்யப்பட்ட தேங்காய்ப்பால் பக்கற்றுக்கள் இறக்குமதி செய்யப்பட்டிருக்கும். இதற்கான உரிமைகளை தனியாரிடம் வழங்கும் ஆபத்தை இந்த அரசாங்கம் உணராதிருக்காது. இதனால், இறக்குமதிக்கான உரித்தை அரசாங்கமே பொறுப்பேற்றிருக்கலாம்.

வர்த்தகர்களை முடக்குவதாக எதிர்க்கட்சிகள் போர்க்கொடி தூக்கும் சந்தர்ப்பமும் இதனால் உருவாகியிருக்கலாம். இவை எல்லாம் இரட்டைப் பின்னலுக்குள் சிக்கியுள்ள அரசியல் முடிச்சுக்கள்.

கோட்டாவின் காலத்தில் நடந்ததும் இதுதானே. நாட்டுக்குள் வரவிருந்த அன்னியச் செலாவணிகளை (டொலர், யூரோ, ரியால், பவுண்) வெளிநாடுகளுக்குள் முடக்கவென ஒரு திட்டமே தீட்டப்பட்டிருந்தது.

வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தை அங்கேயே பெற்றுக் கொண்டு இலங்கையிலுள்ள வீடுகளுக்கு ரூபாவை விநியோகித்த பணப் பரிவர்த்தனை நிலையங்களை பட்டியலிட்டுக் கூற முடியும். இதனால்தான், இந்த 'கிளீன் ஸ்ரீலங்கா' தனியாருக்கு வழங்கப்பட்டுள்ள ஏகபோக வர்த்தக உரிமைகளை தவறாகப் பயன்படுத்தும் அல்லது வேறு சில தரப்புக்களின் அரசியல் தேவைகளுக்காகப் பாவிக்கும் தரப்புக்கள், 'கிளீன் ஸ்ரீலங்கா' திட்டம் அமுலுக்கு வரவுள்ளதால் எச்சரிக்கையாகவே செயற்பட நேரிடும்.

ரணிலின் அரசாங்கம் அமுல்படுத்திய 'அஸ்வெசும' திட்டமும் நேர்மையாக செயற்படுத்தப்படவில்லை. சொந்த, பந்தங்களின் வயிற்றுப்பசியை போக்கும் வகையில் இந்நிதிகள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

அரச அதிகாரிகளின் செல்வாக்கும் இதில், பங்களித்து உள்ளது. இதுவே உண்மை. எல்லாவற்றுக்கும் அரசியல்வாதிகளைக் குறைகூறுவது எய்தவன் இருக்க அம்பை நொந்து கொள்வது போலாகிவிடுமே! இதுபோலதான், நீண்ட நாட்களாக கிடப்பில் கிடக்கும் மக்களின் வேலைகள், தீர்க்கப்படாதுள்ள தேவைகள். இவை, ஏன் கிடப்பில் கிடக்கின்றன, இன்னும் இழுபறியில் ஏன் உள்ளன. இவற்றை ஆராயும் பணிகளையே இந்த 'கிளீன் ஸ்ரீலங்கா' செய்யவுள்ளது. இந்தக் குழுவில் சிறுபான்மை சமூகங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி எவரும் இல்லை. அமைச்சரவையிலும் இந்தக் குறைபாடு உள்ளது. தொடர்ந்து விடப்படும் இந்தத் தவறுகள் திட்டமிட்டதா அல்லது திறமையின் அடிப்படையிலானதா? என்ற கேள்வி எழாமல் இல்லை. இன ரீதியாக தாங்கள் நியமனங்களை வழங்கவில்லை என்கிறது அரசு. கொள்கையில் பிடியாக இருப்பது வரவேற்கத்தக்கது தான். நகர்வுகள் நல்லதாகவே இருக்கட்டும்.

# தமிழரசுக் கட்சியை சிதைப்பதற்கு சதிவலை



கரவெட்டி தில்லைநாதன்

இலங்கைத் தமிழரசுக் கட்சியை சீரழிப்பதற்கு சதிவலை பின்னப்பட்டுள்ளதென்ற சந்தேகம் எனக்கு ஏற்பட்டுள்ளது என்று அக்கட்சியின் சிரேஷ்ட துணைத் தலைவரும், வடக்கு மாகாண சபைத் தவிசாளருமான சி.வி.கே.சிவஞானம் தெரிவித்துள்ளார்.

கட்சிக்கு எதிராக தொடர்ச்சியாக வழக்குகள் தாக்கல் செய்யப்படுவதானது துரதிஷ்டவசமானது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு எதிராக நான்கு வழக்குகள் இதுவரை தாக்கல் செய்யப்பட்டுள்ளன. அது குறித்து கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில், இலங்கைத் தமிழரசுக்கட்சி 75ஆண்டுகளைப் பூர்த்தி செய்துள்ள தமிழ் மக்களின் பாரம்பரிய கட்சியாகும். தமிழர்களின் அபிலாஷைகளை வென்றெடுப்பதற்காக ஆரம்பிக்கப்பட்ட இக்கட்சியானது தற்போதும் அந்தப் பயணத்தில் தீவிரமாக உள்ளது.

ஆனால் துரதிஷ்டவசமாக கட்சிக்கு எதிராக தொடர்ச்சியாக வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு வருகின்றன. இதன் அடிப்படையான நோக்கமானது, கட்சியை செயற்பாடுகளில் இருந்து ஓரங்கட்டுவதும், கட்சிக்குள் பிளவுகளை ஏற்படுத்துவதுமாகும்.

இதற்கு காரணங்கள் உள்ளன. இலங்கைத் தமிழரசுக் கட்சி தான் தற்போது தமிழ் மக்களின் அதிகளவான பிரதிநிதித்துவங்களை கொண்டுள்ள கட்சியாகும். தமிழ்த் தேசியத்தை பலவீனப்படுத்த வேண்டுமெனக் கருதுகின்ற உள்நாட்டு வெளிநாட்டுச் சக்திகள் தமிழரசுக் கட்சியை அரசியல் அரங்கிலிருந்து அகற்றுவதன் மூலம் தான் தங்களின் இலக்கினை அடைய முடியும்.

ஆகவே, இறுதியாக நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில்கூட எட்டு ஆசனங்களை வடக்கு – கிழக்கில் வென்றெடுத்து தனது செல்வாக்கை நிரூபித்துள்ள தமிழரசுக் கட்சியை பலவீனப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக, கட்சிக்குள் இருப்பவர்களையும், வெளியில் இருப்பவர்களையும் பயன்படுத்தி கட்சியை பலவீனப்படுத்துவதற்கு முனையும் தரப்புக்கள் பாரிய சதிவலையொன்றை பின்னியிருக்கின்றார்கள். இந்த விடயத்தை கட்சியின் ஒவ்வொறு உறுப்பினரும் புரிந்து கொள்தல் அவசியமானது.

திரைமறைவில் மேற்கொள்ளப்படும் தமிழ்த் தேசிய எதிர்ப்புச் சக்திகளின் சதிவலையை முறியடிப்பதற்கும், கட்சியை சிறப்பாக தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வதற்கும் அனைத்து உறுப்பினர்களும் முரண்பாடுகளை களைந்து ஒன்றிணைய வேண்டியது அவசியமாகின்றது.

# பழிவாங்கப்பட்ட சமூகத்துக்காக தொடர்ந்து போராடும் ஹக்கீம்

எம்.என்.எம்.யஸீர் அறபாத் (BA)



இலங்கையில் தற்போது புதிய ஆட்சி ஏற்படுத்தப்பட்டிருக்கும் சூழலில், கடந்த ஆட்சியில் நடைபெற்ற அநீதிகளுக்கு நீதி பெற்றுக்கொள்வதோடு, மீண்டும் அவ்வாறான அநீதிகள் இடம்பெறாத வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான நகர்வுகளும் முன்னெடுக்கப்படுகின்றன.

கடந்த ஆட்சியில் முஸ்லிம் சமூகத்தை மிக மோசமாக பாதித்த விடயம் கொவிட் ஜனாஸா எரிப்பு விவகாரமாகும்.

இது கடந்த ஆட்சியாளர்கள் முஸ்லிம் சமூகத்தின் மீது காட்டிய வெறுப்பின் வெளிப்பாடாகப் பார்க்கப்பட்டது. இது போன்ற மோசமான நிலைகள் இனியும் ஏற்பட விடக்கூடாதென்பதற்காக அன்றிலிருந்து இன்றுவரை ரவூப் ஹக்கீம் பல முயற்சிகளை மேற்கொண்டு வருவதைக் காணலாம்.

நம்மில் பலருக்கு ஒரு சம்பவம் நடக்கும் போதிருக்கின்ற ஆர்வம் அதன் பின்னர் இருப்பதில்லை. ஜனாஸா எரிப்பின் போது காட்டிய அக்கறை அவை நிறுத்தப்பட்ட பின்னர் அவை முடிந்து விட்டதாக வேறு வேலைகள் பக்கம் கவனத்தை திருப்பிக் கொண்டோம்.

ஆனாலும், இதுவரை இவ்வலிகளை அனுபவித்த குடும்பங்கள் நீதியின்றி துயரத்தில் வாடுவதை பலரும் நினைத்துப்பார்க்க மறந்து விட்டோம். ஆனால், ரவூப் ஹக்கீம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுக்கவும் இது போன்ற சம்பவங்கள் எதிர்காலத்தில் இடம்பெறாதிருப்பதை உறுதி செய்யவும் முயற்சித்துக் கொண்டிருக்கிறார்.

அன்று ஜனாஸா எரித்த போது அதனைத் தடுப்பதற்காக ஆளும் கட்சியோடு பல முறை, பல சந்தர்ப்பங்களில் பேசினார்.

ஆனாலும், அரசாங்கம் செவி சாய்க்கவில்லை. இருப்பினும் ரவூப் ஹக்கீம் ஓயவில்லை. யார்?, எப்படி? சொன்னால் கேட்குமென்பதைப் புரிந்து கொண்டு ஏனைய முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களையும் இணைத்து இரஜதந்திர ரீதியான காய்களை நகர்த்தி, போராட்டங்களைச்செய்து இறை உதவியால் ஜனாஸா எரிப்பு விவகாரம் முடிவுக்கு வந்தது.

ஆனாலும், கடந்த அரசாங்கம் செய்த தவறை ஒப்புக்கொள்ளவில்லை. ரவூப் ஹக்கீமும் விடுவதாகவில்லை. தொடர்ந்தும் பாராளுமன்றத்தில் குரல் தொடுத்துக்கொண்டே இருந்தார்.

அப்போதைய சுகாதார அமைச்சர்களாகவிருந்த பவித்ரா தேவி வன்னியாராச்சி மற்றும் கெஹலிய ரம்புக்வெல்ல போன்றவர்களிடம் இது தொடர்பில் கேள்விகளை தொடுத்திருந்தார்.

ஒரு கட்டத்தில் அரசாங்கம் தவறு செய்ததை ஏற்றுக்கொண்டு மன்னிப்புக்கோரினாலும், பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டயீடுகளை வழங்க முன்வராது, குறித்த விவகாரத்தோடு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது எவ்வித நடவடிக்கைகளுமின்றி அவர்களைப் பாதுகாக்கும் செயற்பாட்டை முன்னெடுத்தது. அப்போது அதனையும் பாராளுமன்றத்தில் ரவூப் ஹக்கீம் கேள்விக்குட்படுத்தினார்.

ஆனாலும், எரிக்கப்பட்ட ஜனாஸாக்கள் தொடர்பான தகவல்களை வழங்குவதை அப்போதைய அரசு மறுத்து வந்தது.

இந்நிலையில், தற்போதைய புதிய அரசாங்கமானது, அன்று எதிரணியிலிருந்த போது ஜனாஸா எரிப்பு விவகாரத்தில் அரசாங்கத்தின் போக்கைக் கண்டித்தவர்கள் என்ற அடிப்படையில், மேலதிக நடவடிக்கைகளுக்காக குறித்த தகவல்களை தருவார்கள் என்ற எதிர்பார்ப்புடன் இன்றைய சுகாதார அமைச்சரிடமும் எரிக்கப்பட்ட ஜனாஸாக்களின் விபரங்களைக்கோரிய போது கடந்த அரசாங்கம் சொன்னது போல் இந்த அரசாங்கமும் பதிலளித்தமை ஆச்சரியத்தை உண்டுபண்ணியது.

மேலும், இவ்விவகாரத்தில் அன்று தொடர்புபட்டிருந்தவர் மீண்டும் இந்த அரசாங்கத்தின் சுகாதார அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

தவறு செய்தவர்கள் தண்டிக்கப்படும் போது மீண்டுமொரு தவறு நடக்காது தடுக்கப்படும் என்பதோடு, அரசியல்வாதிகளின் அநீதியான செயற்பாடுகளுக்கு அரச நிருவாகிகள் துணை போவதற்கு அச்சப்படுவார்கள்.

அத்தோடு, பாதிக்கப்பட்ட மக்களுக்கு நியாயம் கிடைப்பதோடு, மீண்டும் இவ்வாறான மோசமான தவறு இடம்பெறாதென்பதை சட்டரீதியாக உறுதிப்படுத்திக்கொள்ளவும் வாய்ப்பாகவும் அமையும்.



# யாழ்ப்பாணத்தில் பழைய கட்டடங்களை புனரமைக்கும் பணிக்கு ஒத்துழைப்பு



## ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவிப்பு

(பு.கஜிந்தன்)

2025 இல் பழைய கட்டடங்களை புனரமைப்பதற்கு யாழ். மாநகர சபை நடவடிக்கை எடுத்து வருகின்றது. அதற்கு எங்களது ஒத்துழைப்பும் இருக்கும். உங்களது ஒத்துழைப்புக்களையும் வழங்குங்கள் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார். யாழ். மாநகர சபையால் உள்ளூர் அபிவிருத்தி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 52.5 மில்லியன் ரூபா செலவில் மீள் நிர்மாணம் செய்யப்பட்ட பண்ணை மீன் சந்தைக் கட்டடம் வடக்கு மாகாண ஆளுநரால் சனிக்கிழமை மதியம் (21) திறந்து வைக்கப்பட்டது.

"யாழ்ப்பாணம் கடந்த காலங்களில் தூய்மையான நகரமாக இருந்தது. யாழ்ப்பாணம் இன்று மோசமாக இருக்கின்றது. தூய்மையான அழகான நகரமாக மாற்றியமைக்கும் பொறுப்பு எங்கள் ஒவ்வொருவருக்கும் இருக்கின்றது" என ஆளுநர் குறிப்பிட்டார். மேலும், இந்த மீன் சந்தை மிகவும் கஷடப்பட்டே கட்டியதாகக் கூறினார்கள். இதை எப்படி நாங்கள் பயன்படுத்தப் போகின்றோம் என்பதில்தான் இது அமைக்கப்பட்டமையின் வெற்றி தங்கியிருக்கின்றது. இது உங்களுக்குரிய கட்டடம். இதை தூய்மையாக வைத்துப் பராமரிப்பது உங்கள் ஒவ்வொருவரினதும் பொறுப்பு. நீங்கள் அவ்வாறு பராமரிப்பீர்களாக இருந்தால் அதிகளவு நுகர்வோர்கள் உங்களைத் தேடி வருவதற்கான வாய்ப்பும் இருக்கின்றது, என்றார் ஆளுநர்.

# ஈ.பி.டி.பியை வலுப்படுத்த புதிய கட்டமைப்பு



(பு.கஜிந்தன்)

வன்னி தேர்தல் மாவட்டத்தில் ஈழ மக்கள் ஜனநாயக்க கட்சியின் (ஈ.பி.டி.பி) செயற்பாடுகளை வலுப்படுத்தும் வகையில் புதிய கட்டமைப்பு செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவினால் கட்டமைக்கப்பட்டுள்ளது. ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் வன்னி தேர்தல் மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் முக்கியஸ்தர்கள், செயற்பாட்டாளர்களுடன் நேற்று முன்தினம் கலந்துரையாடலொன்றை செயலாளர் நாயகம் முன்னெடுத்திருந்தார். குறிப்பாக வன்னி தேர்தல் மாவட்டத்தின் அரசியல் செயற்பாடுகள் குறித்து ஆராய்வதற்காக வவுனியா சென்றிருந்த செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா நாடாளுமன்ற தேர்தலின் பின்னடைவுகள் குறித்த அக, புற காரணிகளை ஆராய்ந்து கட்சியை வலுப்படுத்தும் வகையில் கட்டமைப்புக்களை மறுசீரமைக்கவுள்ளதாகவும் தெரிவித்தார். இதனடிப்படையில் முல்லைத்தீவு,மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய வன்னி தேர்தல் மாவட்டத்தின் கட்சியின் அரசியல் செயற்பாடுகளை செழுமைப்படுத்தி முன்னெடுத்துச் செல்லும் வகையில் முல்லைத்தீவு, வவுனியா ஆகிய மாவட்டங்களின் அமைப்பாளராக ஜெயராஜ் (தோழர் கிருபன்) அவர்களை கொண்ட மாவட்டக் கட்டமைப்பும் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவால் நமிக்கப்பட்டது. மேலும், கட்சியின் தேசிய மாநாட்டை விரைவில் நடத்துவதற்கு தயாராகுமாறும் கட்சியின் உறுப்பினர்களுக்கு அறிவுறுத்தியுள்ளமை குதிப்பிடத்தக்கது.



# சந்நிதியான் ஆச்சிரமம் உரும்பிராய் மக்களுக்கு நிவாரண உதவி

(பு.கஜிந்தன்)

இயற்கை பேரிடரால் பாதிக்கப்பட்ட யாழ்ப்பாணம் - கோப்பாய் பிரதேச செயலகம் உரும்பிராய் தெற்கு பிரதேசத்தில் உள்ள துஃ265 கிராம சேவையாளர் பிரிவான யோகபுரம் கிராமத்தில் தெரிவு செய்யப்பட்ட 157 குடும்பங்களுக்கு, வடமராட்சி தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரமத்தால் 785,000 ரூபா பெறுமதியான அத்தியாவசிய உணவுப் பொருட்கள் யோகபுரம் அண்ணா சனசமூக நிலையத்தில் வைத்து வழங்கப்பட்டது. நேற்று முன்தினம் காலை 10.30 மணியளவில் அண்ணா சனசமூக நிலைய தலைவர் ச.ரவீன்ராஜ் தலைமையில் நடைபெற்ற இவ் உதவித் திட்டத்தினை சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் தொண்டர்களுடன் நேரடியாகச் சென்று வழங்கி வைத்ததுடன் மருத்துவர் செந்தில்குமரனும் கலந்துகொண்டார்.

# கிளிநொச்சி மாவட்டத்தில் இடைவிலகிய மாணவர்கள் மீள் இணைப்பு

(ஜதுர்சிகா)

கிளிநொச்சி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் பாடசாலைகளை விட்டு இடைவிலகிய நிலையில் இனம் காணப்பட்ட 90 பேரில் 85 பேர் பாடசாலைகளில் இணைக்கப்பட்டதுடன் பாடசாலைகளுக்கு ஒழுங்கற்ற வரவினை கொண்ட 88 மாணவர்கள் அடையாளம் காணப்பட்டவர்களும் மீள இணைக்கப்பட்டுள்ளனர்.

அதாவது குறித்த சிறார்கள் பெற்றோர்களை பிரிந்து வாழுதல் மற்றும் பெற்றோர்களை இனம் கண்டு அவர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்துதல் மற்றும் பாடசாலை விடுகை பத்திரங்களை பெற்று வேறு பாடசாலைகளில் இணைக்கப்படாமை இடை விலகிய மாணவர்களின் எழுத்து வாசிப்புத்திறன் குறைவாக காணப்படுதல் என பல்வேறு நெருக்கடிகள் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# யாழ். பொருளாதார மத்திய நிலையத்தை இயக்க வைப்பதற்கு நடவடிக்கை அவசியம்

## ஆளுநருக்கு கோரிக்கை கடிதம்

தென்மராட்சியில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் பொருளாதார மத்திய நிலையத்தை உடனடியாக இயங்க வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இயற்கை நண்பர்கள் இயக்கம் வடக்கு மாகாண ஆளுநரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக அவர்கள் தமது கோரிக்கையில் தெரிவித்துள்ளவை வருமாறு,

பொருளாதார மத்திய நிலையங்கள் முழுமையாக சந்தைப்படுத்தல் வர்த்தக நோக்கங்களைக் கொண்டவை. ஆனாலும் அவை மொத்த சில்லறை வர்த்தகத்தை அடிப்படையாகக் கொண்டவை, உற்பத்திப் பிரதேசங்களை மையமாகக் கொண்டவை, சில்லறை வர்த்தகத்தை அடிப்படையாகக் கொண்டவை என்ற வகையில்தான் யாழ்ப்பாணம் பொருளாதார மத்திய நிலையம் உள்ளது.

யாழ்ப்பாணம் விவசாயிகள் தமது உற்பத்திகளைத் தகுந்த விலையில் விற்பனை செய்வதற்கும், நுகர்வோர் குறைந்த விலையில் மரக்கறிகள், பழங்களைக் கொள்வனவு செய்வதற்குமான வசதிகளை உருவாக்கும் நோக்கில் 20 வர்த்தக நிலையங்களை உள்ளடக்கி 200 மில்லியன் ரூபா செலவில் தென்மராட்சியின் மட்டுவிலில் அமைக்கப்பட்ட யாழ்ப்பாணம் பொருளாதார மத்திய நிலையம் 2022 இல் திறக்கப்பட்டது.

இந்த யாழ்ப்பாணம் பொருளாதார மத்திய நிலையத்தை இயங்க வைப்பதன் மூலம் அதிக நன்மை பெறப்போகின்றவர்கள் தமது கடின உழைப்பின் மூலம் விவசாயப் பொருள்களை உற்பத்தி செய்யும் விவசாயிகள்தான். குறிப்பாகப் போட்டிகரமான நிலைமையின் மூலம் வினைத்திறன் மிக்க விலைப் பொறிமுறை ஒன்றை நடைமுறைப்படுத்துவதற்கும் இயலுமாகும் வகையில் சேதனப் பசளை உற்பத்தி மேம்பாடு மற்றும் விநியோக ஒழுங்குபடுத்துகை மற்றும் நெல், தானிய வகைகள், சேதன உணவுகள், மரக்கறிகள், பழவகைகள், மிளகாய், வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு செய்கை பேன்ற உணவு உற்பத்தியில் ஈடுபடும் விவசாயிகளின் சந்தைப்படுத்தலை இலகுபடுத்த வேண்டுமானால் பொருளாதார மத்திய நிலையம் உடனடியாக இயங்கு நிலைக்கு கொண்டுவரப்பட வேண்டும்.

தற்போது நடைமுறையில் உள்ள மொத்தக் காய்கறி கொள்முதலாளர்கள் சர்வாதிகாரப் போக்கோடு செயற்படுகின்றனர் எனவும், 10 வீதம் என்ற தரகுப் பணத்தைப் பெறும் நிலை காணப்படுகிறது என்றும் தெரிவிக்கப்படுகிறது. பகிரங்க கேள்வி கோரலுக்கு உட்படுத்துகின்ற போது விவசாயிகளின் பொருள்களுக்கு நியாயமான விலை கிடைக்கும்.



எனவே யாழ்ப்பாணத்தில் உற்பத்தி செய்யும் பொருள்களில் உள்ளூர் தேவைகள் போக எஞ்சியவற்றை தென்பகுதி நுகர்வோருக்கு விற்பனை செய்ய முடியும்.

குறிப்பாக நன்நீர் வசதி, வாகனத் தரிப்பிட வசதி மற்றும் அங்கு சேரும் கழிவுகளை வெளியேற்றக் கூடிய பொறிமுறை என்பவற்றுடன் தொற்று நோய்கள் பரவுவதற்கான வாய்ப்புக்களையும் தடுக்கக் கூடிய செயற்றிட்டம் ஆகியவற்றுடன் இது இயங்கு நிலைக்கு வருவதனை உறுதி செய்யவேண்டும் என்று விவசாயிகளின் சார்பாக வடக்கு மாகணசபையின் ஆளுநரை கேட்டுக்கொள்கின்றோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தனங்கிளப்பு பகுதியில் சட்டவிரோத பனை மரங்கள் தறிப்பு

(பு.கஜிந்தன்)

தனக்கிளப்பு பகுதியில் 25க்கும் மேற்பட்ட அனுமதியற்ற சட்டவிரோத பனை மரங்கள் தொடர்ச்சியாகத் தறிக்கப்பட்டு வந்த நிலையில் பொதுமக்கள் வழங்கிய முறைப்பாட்டை அடுத்து பனை அபிவிருத்தி சபையால் சாவகச்சேரி பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது .

குறித்த சம்பவம் தொடர்பில் பனை அபிவிருத்தி சபையின் தலைவர் சகாதேவன் தெரிவிக்கையில்,

தனங்கிளப்புப் பகுதியில் தொடர்ச்சியாகச் சட்டவிரோத பனை மரங்கள் வெட்டப்படுவதாக பனை அபிவிருத்திச் சபைக்கு முறைப்பாடு கிடைக்கப்பெற்றது.

முறைப்பாட்டின் அடிப்படையில் எமது உத்தியோத்தர்கள் குறித்த இடத்திற்கு விஜயம் மேற்கொண்ட நிலையில் அங்கு 25க்கும் மேற்பட்ட பனை மரங்கள் தறிக்கப்பட்டமை அவதானிக்கப்பட்டதுடன் கனகர இயந்திரங்கள் குறித்த பகுதியில் கொண்டுவரப்பட்டமையும் நேரடியாக அவதானிக்கப்பட்டது.

இளவயது பனைகள் பல தறிக்கப்பட்டும் அடிப்பாகங்கள் எயியூட்டப்பட்ட நிலையிலும் காணப்பட்டது.

சம்பவம் தொடர்பில் நெல்லியடியைச் சேர்ந்த காணி உரிமையாளர் சாவகச்சேரி பொலிஸ் நிலையம் வரவழைக்கப்பட்டுள்ள நிலையில் பொலிசார் வழக்குத் தாக்கல் செய்வதாக உறுதியளித்தனர்.

பனை மரங்களை வெட்டுவதற்காக எடுத்துவரப்பட்ட கனகர இயந்திரங்களை முறைப்பாட்டில் பதிவு செய்யுமாறு எமது உத்தியோகஸ்தர்கள் வலியுறுத்திய நிலையில் சாவகச்சேரி பொலிசார் ஏற்க மறுத்துள்ளனர்.



இந்த சட்ட விரோத செயற்பாடுகளுடன் சாவகச்சேரி பொலிசாருக்கு தொடர்பு இருப்பதாகச் சந்தேகம் எழுந்த நிலையில் அவர்களுடன் தொலைப்பேசியில் தொடர்பு கொண்டு வாகன இலக்கங்களை முறைப்பாட்டில் பதியாவிட்டால் மேலிடத்தில் முறைப்பாடு செய்ய வேண்டி வரும் எனக் கூறிய நிலையில் முறைப்பாட்டை ஏற்பதாக தெரிவித்ததாக அவர் மேலும் தெரிவித்தார்.

சட்ட விரோத பனை மரங்கள் தறிக்கப்பட்டால் 0779273042 தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தகவல்களைத் தர முடியும் என பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் மேலும் தெரிவித்தார்.

# யாழ்.மாவட்டத்தில் டெங்கு அதிகரிப்பு




யாழ். மாவட்டத்தில் டிசெம்பர் மாதத்தில் இதுவரை 91 பேர் டெங்குத் நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது, "யாழ்ப்பாணத்தில் அண்மையில் நிலவிய சீரற்ற காலநிலையைத் தொடர்ந்து, டெங்குத் தொற்று மிகையாக அதிகரித்து வருகின்றது. இதன்படி, நவம்பர் மாதத்தில் 134 பேரும், டிசெம்பர் மாதத்தில் 91 பேரும் டெங்குத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர். எனவே, பொதுமக்கள் தங்களின் சுற்றுப்புறச் சூழலைத் தூய்மையாகப் பேணுவது அவசியம். என்று அறிவுறுத்தியுள்ளார்.

# வடமராட்சி கிழக்கில் கரையொதுங்கிய படகு



(பு.கஜிந்தன்)

வடமராட்சி கிழக்கு, உடுத்துறை ஐந்தாம் பனையடி கடற்கரை பகுதியில் படகு ஒன்று நேற்று காலை (23) கரையொதுங்கியுள்ளது. OFRP-6224JFN என்னும் இலக்கமுடைய படகு ஆட்கள் யாருமற்று கடலில் மிதந்துவந்து கரையொதுங்கியுள்ளதாக அப்பகுதி மக்கள் அதிகாரிகளுக்கு தகவல் கொடுத்துள்ளனர். இதனடிப்படையில் சம்பவ இடத்திற்கு வருகை தந்த வடமராட்சி கிழக்கு கடற்தொழிலாளர் சங்க சமாச தலைவர் மற்றும் பொலிசார் படகை பார்வையிட்டதுடன் நீரியல்வளத் திணைக்கள அதிகாரிகளுக்கும் தெரியப்படுத்தியுள்ளனர் இயந்திரமற்று கரையொதுங்கிய குறித்த படகை கடத்தல்காரர்கள் கையாண்டிருக்கலாமென பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

# விமானப்படையின் விமானங்களை நான் ஒருபோதும் அனாவசியமாக பாவிக்கவில்லை



நான் அமைச்சராக இருந்த காலத்தில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எனது தனிப்பட்ட தேவைகளுக்காகவோ அல்லது உத்தியோகபூர்வ தேவைகளுக்காகவோ விமானப்படையின் விமானங்களை பாவித்ததில்லையென முன்னாள் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் பதினைந்து முன்னாள் அமைச்சர்கள் இலங்கை விமானப்படையின் பல்வேறு விமானங்களை பல்வேறு பயண மற்றும் போக்குவரத்து தேவைகளுக்கு பயன்படுத்தியதாக ஊடகங்களில் வெளியான செய்திக்கு பதிலளித்தபோதே முன்னாள் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்த முன்னாள் அமைச்சர், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் பிரதமர் ரணில் விக்ரமசிங்க, முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய ஆகியோர் அமைச்சராக இருந்த காலத்தில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தமது தனிப்பட்ட தேவைகளுக்காக அல்லது உத்தியோகபூர்வ தேவைகளுக்காக விமானப்படைக்கு சொந்தமான விமானங்களை பெற்றுக் கொள்ளவில்லை என குறிப்பிட்டுள்ளார். அவர் மூன்று சந்தர்ப்பங்களில் மட்டுமே அரசாங்க விவகாரங்களில் பங்கேற்றார், அவர் அவர்களுடன் விமானங்களில் பயணம் செய்தார்.

பொதுப் பணத்தைச் செலவு செய்த முன்னாள் அமைச்சர்கள் விமானப்படை விமானங்களைத் தமது சொந்த நோக்கங்களுக்காகப் பயன்படுத்துவதைக் குறிப்பிடுவது உண்மையைத் திரித்து அவதூறான செய்திகளை வெளியிடுவதாகவும், இதில் முறைகேடுகள் நடந்தால் அதற்கு பொறுப்புக் கூற வேண்டும் என்றும் முன்னாள் அமைச்சர் கூறினார். அரசு இது தொடர்பில் பூரண விசாரணை செய்து விசாரிக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# ஒரே நாடு ஒரே தேர்தல்:
# மசோதாக்களில்
# என்ன இருக்கிறது?



இந்தியாவில் "ஒரே நாடு ஒரே தேர்தல்" திட்டம் நாடாளுமன்ற மக்களவைக்கும் அனைத்து மாநில மற்றும் யூனியன் பிரதேச சட்டப் பேரவைகளுக்கும் ஒரே நேரத்தில் தேர்தல் நடத்த வழிவகுக்கக் கூடியது. பாஜக இதை அண்மைக் காலமாக அழுத்தமாக வலியுறுத்தி வருகிறது.

கடந்த செவ்வாய்க்கிழமை (டிச.17) இதுதொடர்பான மசோதாக்களை, மக்களவையில் கடும் எதிர்ப்புக்கு இடையே மத்திய சட்டத்துறை அமைச்சர் அர்ஜுன் ராம் மேவால் தாக்கல் செய்தார்.

நாடாளுமன்ற தேர்தலுடன் அனைத்து மாநில சட்டப்பேரவைகளுக்கும் ஒரே



நேரத்தில் தேர்தல் நடத்த வழிவகை செய்யும் அரசமைப்புச் சட்ட (129-ஆவது திருத்தம்) மசோதா 2024 மற்றும் யூனியன் பிரதேச சட்டமன்றங்களுக்கும் ஒரே நேரத்தில் தேர்தல் நடத்த வழிவகை செய்யும் யூனியன் பிரதேச சட்ட (திருத்தம்) மசோதா 2024 ஆகியவை மக்களவையில் தாக்கல் செய்யப்பட்டன.

பின்னர் இந்த மசோதாக்கள், நாடாளுமன்ற கூட்டுக்குழுவின் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டுள்ளன.

இந்த மசோதாக்கள் சட்டமாகும் பட்சத்தில், மக்களவைக்கும் அனைத்து மாநில மற்றும் யூனியன் பிரதேச சட்டப் பேரவைகளுக்கும் ஒரே நேரத்தில் எவ்வாறு தேர்தல் நடத்தப்படும்? பதவிக் காலம் முடிவடையும் முன்பே ஆட்சி கவிழ்ந்து, யாருக்கும் பெரும்பான்மை இல்லாத நிலை ஏற்பட்டால் என்ன நடக்கும்?

மக்களவைத் தேர்தலுடன் ஏதாவது ஒரு மாநிலத்திற்கு சட்டப்பேரவைத் தேர்தலை நடத்த முடியாத நிலை ஏற்பட்டால் என்ன நடக்கும்? இவை குறித்து இந்த மசோதாக்களில் வழங்கப்பட்டுள்ள விளக்கங்களை இங்கு பார்க்கலாம்.

இந்த மசோதாக்கள் தற்போதுள்ள நிலையில், மக்களவைத் தேர்தல் மற்றும் மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களுக்கான சட்டப்பேரவைத் தேர்தல்கள் குறித்து மட்டுமே பேசுகிறது என்பதை நினைவில் கொள்ள வேண்டும். உள்ளூராட்சித் தேர்தல்கள் குறித்து இதில் குறிப்பிடப்படவில்லை.

"ஒரே நாடு ஒரே தேர்தல்" என்பது தேர்தல் சீர்திருத்தத்திற்கான ஒரு பெரிய முன்னேற்றம் என்று பாஜக அரசு தொடர்ந்து கூறி வருகிறது.

கடந்த 2023ஆம் ஆண்டு செப்டம்பரில், மோதி அரசு "ஒரே நாடு, ஒரே தேர்தல்" திட்டத்திற்கான சாத்தியக்கூறுகளை ஆராய முன்னாள் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் தலைமையில் உயர்மட்டக் குழுவை அமைத்தது.

கடந்த மார்ச் மாதம் குடியரசுத் தலைவர் திரௌபதி முர்முவிடம் இந்தக் குழு தனது அறிக்கையை அளித்தது. அக்குழு வழங்கிய பரிந்துரைகளின் அடிப்படையிலேயே, மத்திய சட்டத்துறை அமைச்சர் அர்ஜுன் ராம் மேவால் தாக்கல் செய்த மசோதாக்கள் தயாரிக்கப்பட்டிருந்தன.

### ஒரே நேரத்தில் தேர்தல் எப்படி நடத்தப்படும்?

முதல் மசோதா, அரசமைப்புச் சட்ட (129வது திருத்தம்) மசோதா 2024 (Bill no. 275). அரசமைப்பு சட்டப்பிரிவு 82(A) எனும் புதிய பிரிவு, இந்த மசோதாவில் சேர்க்கப்பட்டுள்ளது.

இந்தப் பிரிவில் கீழ்காணும் ஏழு புதிய சரத்துகள் சேர்க்கப்பட்டுள்ளன. அதன்படி, பொதுத்தேர்தல் முடிவுற்ற பிறகு மக்களவைக் கூட்டம் கூடும் முதல் நாளன்று, இந்த மாற்றங்களை குடியரசுத் தலைவர் நடைமுறைக்குக் கொண்டு வரும் வகையில் பொது அறிவிப்பாணையை வெளியிடலாம். அதன்படி, மக்களவை மற்றும் சட்டப்பேரவை தேர்தல்களை ஒரே நேரத்தில் நடத்த முடியும். இது, நடைமுறைக்குக் கொண்டு வரப்படும் தேதி என அழைக்கப்படுகிறது.

இந்தத் திகதிக்குப் பின்னர், சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெற்ற எந்த மாநிலத்திலும் ஐந்து ஆண்டுகளுக்கு முன்னதாகவே சட்டமன்றத்தின் ஆட்சிக்காலம் முன்கூட்டியே முடிவுக்கு வரும். அதேபோன்று, மக்களவைத் தேர்தல் எப்போது நடந்திருந்தாலும், நாடு முழுவதும் ஒரே நேரத்தில் தேர்தல் நடத்தப்படுவதற்காக, அதன் ஆட்சிக் காலமும் முடிவுக்கு வரும். அதாவது, மாநில சட்டமன்றங்கள் மற்றும் மக்களவை இரண்டின் ஆட்சிக்காலமும் ஒரே நேரத்தில் முடிவுக்கு வரும்.

இதன்பிறகு, மக்களவை மற்றும் அனைத்து மாநில சட்டமன்றங்களுக்கும் தேர்தல் ஆணையம் ஒரே நேரத்தில் தேர்தல்களை நடத்தலாம். இங்கு "ஒரே தேர்தல்" (Simultaneous election) என்பது, மக்களவை மற்றும் மாநில சட்டப் பேரவைகளுக்கு ஒரே நேரத்தில் தேர்தல்கள் நடத்தப்படுவதைக் குறிக்கிறது.

மக்களவைத் தேர்தலுடன் சேர்த்து எந்தவொரு மாநிலத்திற்காவது சட்டமன்றத் தேர்தலை நடத்த முடியாது என தேர்தல் ஆணையம் கருதினால், அந்த மாநிலத்திற்கு பின்னர் வேறு திகதியில் தேர்தலை நடத்த வேண்டும் என குடியரசுத் தலைவருக்குப் பரிந்துரை செய்து அதற்கான ஆணையை தேர்தல் ஆணையம் பிறப்பிக்கலாம். அப்படி தேர்தல் திகதி ஒத்திவைக்கப்பட்ட மாநிலங்களின் சட்டப்பேரவையும், மக்களவை ஆட்சிக்காலம் எப்போது முடிவுக்கு வருகிறதோ, அதே திகதியில் தான் முடிவுக்கு வரும்.

சட்டப்பேரவைத் தேர்தலை அறிவிக்கும் நேரத்திலேயே, அந்த மாநிலத்தின் ஆட்சிக்காலம் எப்போது முடிவுக்கு வரும் என்பதையும் தேர்தல் ஆணையம் தெரிவிக்கலாம்.

### மக்களவை கலைக்கப்பட்டால் என்ன நடக்கும்?

மக்களவை கலைக்கப்பட்டால், என்ன நடக்கும் என்பது குறித்தும் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. அரசியலமைப்பு சட்டப்பிரிவு 83 (பிரிவு 2)க்குப் பிறகு கூடுதலாகக் கீழ்காணும் பிரிவுகள் சேர்க்கப்பட்டுள்ளன.

மக்களவையின் முதல் கூட்டம் நடைபெறும் திகதியிலிருந்து அடுத்த ஐந்து ஆண்டுக் காலம்தான் அதன் முழு பதவிக் காலமாகக் குறிப்பிடப்படலாம்.

முழு ஆட்சிக்காலமும் முடிவுறுவதற்கு



முன்னதாகவே மக்களவை கலைக்கப்படும் பட்சத்தில், அவை கலைக்கப்பட்ட திகதிக்கும், அதன் முழு ஆட்சிக் காலத்திற்கும் (முதல் கூட்டம் நடைபெற்ற திகதியில் இருந்து வரும் ஐந்து ஆண்டுகள்) இடைப்பட்ட காலம்தான், அடுத்து தேர்தல் நடைபெற்று ஆட்சிக்கு வரும் புதிய மக்களவையின் ஆட்சிக்காலமாகும். உதாரணமாக, மக்களவை இரண்டரை ஆண்டுகளில் கலைக்கப்படுகிறது என வைத்துக்கொள்வோம். புதிய மக்களவையின் ஆட்சிக்காலம், அடுத்த இரண்டரை ஆண்டுகள் மட்டுமே நீடிக்கும்.

புதிய மக்களவை ஏற்கெனவே கலைக்கப்பட்ட அவையின் தொடர்ச்சியாக இருக்காது. இப்படி அவை கலைக்கப்பட்டு புதிய மக்களவையைத் தேர்வு செய்வதற்காக நடத்தப்படும் தேர்தல் இடைக்கால தேர்தலாக கருதப்படும். இதன் ஆட்சிக்காலம் முழுந்து நடைபெறும் தேர்தல், பொதுத் தேர்தலாகக் கருதப்படலாம்.

### சட்டமன்றம் கலைக்கப்பட்டால் என்ன ஆகும்?

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டால் என்ன நடக்கும் என்பதற்கு வழங்கப்பட்டுள்ள வரையறைகளைப் போலவே, சட்டமன்றங்கள் குறித்தும் விளக்கப்பட்டுள்ளது.

அதன்படி, மக்களவைக்கு செய்யப்பட்டுள்ள மாற்றங்கள், சட்டமன்றத்திற்கும் பொருந்தும் வகையில் அரசியலமைப்பு சட்டப்பிரிவு 172இல் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மற்றொரு சட்ட மசோதா என்ன? யூனியன் பிரதேசங்களுக்கான சட்டத்திருத்த மசோதா, 2024 (Bill no.276) என்ற மற்றொரு மசோதாவும் செவ்வாய்கிழமை மக்களவையில் தாக்கல் செய்யப்பட்டது.

அதன்படி, யூனியன் பிரதேச அரசுகள் சட்டம், 1963இல் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. டெல்லி தேசிய தலைநகர் பிரதேச அரசு சட்டம் 1991, ஜம்மு-காஷ்மீர் மறு சீரமைப்பு சட்டம் 2019 ஆகியவற்றிலும் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

யூனியன் பிரதேசங்களின் சட்டமன்றங்களுக்கான ஆட்சிக்காலம், முழு ஆட்சிக்காலம் முடிவுறுவதற்கு முன்பு கலைக்கப்பட்டால் என்ன நடக்கும், புதிய சட்டமன்றத்தின் ஆட்சிக்காலம் என்ன என்பது குறித்த வரையறைகள் இந்தத் திருத்தங்களில் விளக்கப்பட்டுள்ளன.

அவற்றுக்கு குறிப்பிடப்பட்டு இருக்கும் மாற்றங்களும், நாடாளுமன்றம் மற்றும் சட்டமன்றங்களைப் போலவே உள்ளன.

- நன்றி பிபிசி

## வடமத்திய மாகாண வைத்தியசாலைகளில் தாதியர்கள் பற்றாக்குறை

எம்.ரீ.ஆரிப்

வடமத்திய மாகாணத்தில் உள்ள வைத்தியசாலைகளில் சுமார் 150க்கும் மேற்பட்ட தாதியர்கள் பற்றாக்குறை நிலவுவதாகவும் சுமார் 07 தசாப்தங்களாக இந்நாட்டை ஆட்சி செய்த ஆட்சியாளர்கள் நோயாளிகளுக்கு வைத்தியசாலைகளில் தரமான சேவைகளை வழங்கும் வாய்ப்பை நாட்டுக்கு இல்லாமல் செய்துள்ளதாக அகில இலங்கை தாதியர் சங்கத்தின் பிரதான செயலாளர் பி.எம்.எல்.வீரசூரிய தெரிவித்தார். வடமத்திய மாகாண அகில இலங்கை தாதியர் சங்கத்தினால் ஹிங்குராக்கொடை பகுதியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கும் போது,

வடமத்திய மாகாணத்தில் இரண்டு வருடங்களுக்கும் மேலாக நிலவி வரும் இருதய கோளாறுகள் மற்றும் ஏனைய சுகாதார பிரச்சினைகள் தொடர்பில் வடமத்திய மாகாண சுகாதார அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டது. ஆனால் கடந்த அரசாங்கங்கள் எவையும் இப்பிரச்சினைக்கு தீர்வுகளை வழங்கவில்லை.

இந்த விடயங்கள் தொடர்பில் வடமத்திய மாகாண ஆளுநர் வசந்த ஜினதாசவுடன் கலந்துரையாடியுள்ளோம். இந்த பிரச்சினைக்கு ஆளுநரிடம் இருந்து சாதகமான பதில் கிடைத்துள்ளது.இதன்படி மாகாண சுகாதார அதிகாரிகளுடன் கலந்துரையாடி பிரச்சினைக்குத் தீர்வுகளை வழங்குவதற்கு ஆளுநர் தீர்மானித்துள்ளார்.

ஆனால் மாகாண சுகாதார அதிகாரிகள் பின்தங்கி உள்ளார்கள். 2017 தொடக்கம் இந்த மாகாணத்தில் தாதியர்களுக்கான பற்றாக்குறை நிலவுகின்றது.

இது குறித்து சுகாதார அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்ட போது அவர்கள் 2017 ஆம் ஆண்டு சேவை நியமனங்களை வழங்கும் நடைமுறைக்கு அமைவாக அவர்கள் செயல்படுகின்றனர். ஆனால் அவ்வாறு செயல்படுவதால் இன்று மருத்துவ மனைகளில் இதய நோய் உள்ளிட்ட சேவைகள் பராமரிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளன.

இந்த மாகாணத்தில் தரமான தாதியர் சேவையினை வழங்க சுமார் 600 தாதியர்கள் சேவையில் இணைத்து கொள்ளப்பட வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## துப்பாக்கியால் சுட்டவர் கைது

எம்.ரீ.ஆரிப்

மிஹிந்தலை கிரிமிட்டியாவ பகுதியில் 28 வயது இளைஞனை துப்பாக்கியால் சுட்டநபரைப் பொலிசார் கைது செய்துள்ளனர்.

கிரிமிட்டியாவ சீப்பிக்குளம் பகுதியைச் சேர்ந்த 32 வயதுடைய நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். காணி தகராறு காரணமாக குறித்த நபர் அயல்வீட்டாரை துப்பாக்கியால் சுட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர். துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த நபர் தம்மன்னாவ ஆரம்ப வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மிஹிந்தலை பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

## அதிகார அரசியல் காரணமாகவே அடையாள மோதல் தீவிரமடைந்தது

### விரிவுரையாளர் கலாநிதி புஸ்பராஜா

ஏ.எச்.ஏ.ஹுஸைன்



இலங்கையில் காணப்படும் அடையாள மோதலானது அரசியல் கட்சிகளின் அதிகார அரசியல் போட்டிகளின் காரணமாக தீவிரமடைந்தே வந்துள்ளதென கிழக்குப் பல்கலைக்கழக அரசியல் விஞ்ஞான விரிவுரையாளர் கலாநிதி என்.புஸ்பராஜா தெரிவித்தார்.

தேசிய சமாதானப் பேரவையின் அனுசரணையில் மட்டக்களப்பு மாவட்ட சர்வமதப் பேரவையினால் ஒழுங்கு செய்யப்பட்ட செயலமர்வில் கலந்து கொண்ட பௌத்த, ஹிந்து, இஸ்லாமிய, கிறிஸ்தவ, மற்றும் கத்தோலிக்கரல்லாத சமயங்களைச் சேர்ந்த மாவட்ட சர்வமதக் குழுச்செயற்பாட்டாளர்கள், சிவில் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள், மதத் தலைவர்கள், இளைஞர் யுவதிகள் மத்தியில் அவர் இந்தக் கருத்தை வெளியிட்டார்.

மட்டக்களப்பு மாவட்ட சர்வமதப் பேரவைக்கான இணைப்பாளர் ஆர்.மனோகரன் தலைமையில் பன்மைத்துவ உள்வாங்கல் மூலம் சமூக நியாயத்தையும் இன நல்லிணக்கத்தையும் வலுப்படுத்தல் எனும் தெளிவூட்டும் நிகழ்வு நேற்றுமுன்தினம் ஞாயிறன்று (22) மட்டக்களப்பில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் தேசிய சமாதானப் பேரவையின் திட்ட அலுவலர் முனிப் றஹ்மான், மாவட்ட சர்வமதப் பேரவைக்கான உதவி இணைப்பாளர் எம்.ஐ.அப்துல் ஹமீட், ஆகியோரும் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் தொடர்ந்து தெளிவூட்டலைச் செய்த வளவாளர் கலாநிதி புஸ்பராஜா,

அதிகாரம் மிக்க அரசியல்வாதிகளும், ஆட்சியாளர்களும் மக்களிடையே உள்ள அடையாள அடிப்படையிலான வேறுபாடுகளை தங்கள் சுயநலத்திற்காகப் பயன்படுத்திக் கொண்டார்கள். சந்தர்ப்பங்களில் அரசியல் ரீதியாக பலம் வாய்ந்த பெரும்பான்மையினக் குழுக்கள் இனங்களுக்கிடையே மத மற்றும் இன மோதல்களை ஏற்படுத்தி வன்முறையை ஊக்குவிக்கும் வகையில் ஈடுபட்டு வந்துள்ளனர். இது தொடர் கதையாக நிகழ்ந்து வந்துள்ளது.

எனவே, இத்தகைய நடவடிக்கைகள் நிறுத்தப்படவேண்டும் என்பதோடு இத்தகைய நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியும் வழங்கப்படவேண்டும்.

அனைத்து இலங்கையர் மத்தியிலும் ஒரே நாட்டைச் சேர்ந்தவர்கள் என்ற தேசிய உணர்வு காணப்படாமை பன்மைத்துவ கலாசாரத்தை ஏற்றுக்கொள்ளாமை உள்வாங்குதலுக்குப் பதிலாக சட்டம், கொள்கை, நடைமுறை என்பனவற்றில் புறந்தள்ளும் பாரபட்சம் நடைமுறையில் இருந்து வந்துள்ளது.

மேலும், மனித உரிமைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்காமை தண்டனையிலிருந்து விலக்கு அளிக்கப்படுதல் குறைந்தளவிலான அர்ப்பணிப்பு பலமான தேசிய தலைமைத்துவம் இன்மை ஆகியனவும் இன விரிசல்கள் ஏற்படுவதற்கு தோதாய் அமைந்து விட்டிருந்தன.

இன்னும், இனவாத அரசியல், கடந்த காலம் பற்றி பக்கச் சார்பான வியாக்கியானங்கள், பிரித்தானியரின் பிரித்தாளும் தந்திரங்கள், காலனித்துவ கொள்கைகள், காலனித்துவத்துக்குப் பிற்பட்ட இலங்கையில் மாறிமாறி ஆட்சிக்கு வந்த அரசாங்கங்களின் கொள்கைகள் போன்ற பல காரணிகள் இலங்கையில் உள்வாங்கலான சமூக கட்டமைப்பின் வெற்றிக்கு சவாலாக அமைந்திருந்தன.

சமூக நல்லிணக்கத்தையும் அரசியல் ஸ்திரத்தன்மையையும் நிலையான அபிவிருத்தியையும் வளர்ப்பதற்கு பன்மைத்துவ சமூகத்தில் உள்வாங்க லானது அவசியமானதாகும்.

பன்மைத்துவ சமூகங்களின் வெற்றியை உறுதிசெய்வதில் மிக முக்கியமான காரணிகளில் ஒன்று, சகல தனிநபர்களும் தங்கள் இனப் பின்னணியைப் பொருட்படுத்தாமல் மதிப்பு, மரியாதை மற்றும் வலுவூட்டப் பெற்றவர்களாக உணரும் சூழல்களை உருவாக்க வேண்டும்." என்றார்.

## சதொச களஞ்சிய வளாகத்துக்கு அமைச்சர் வசந்த விஜயம்



எம்.ரீ.ஆரிப்

பல வருடங்களாக கைவிடப்பட்டிருந்த ஹிங்குராக்கொட சதொச களஞ்சிய வளாகத்திற்கு வர்த்தக உணவு பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அமைச்சர் வசந்த சமரசிங்க கண்காணிப்பு விஜயமொன்றை அண்மையில் மேற்கொண்டிருந்தார்.

5000 மெட்ரிக் டொன் கொள்ளளவு கொண்ட இக் களஞ்சியசாலை பல வருடங்களாக கைவிடப்பட்டுள்ள களஞ்சிய வளாகத்தை சீர்செய்து எதிர்வரும் பருவ கால அறுவடை நெல்லை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அமைச்சர் பணிப்புரை விடுத்துள்ளார்.

தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் குழு இந்த களஞ்சியசாலையை பயன்பாட்டிற்கு சீர் செய்வதற்கு முன்வந்துள்ளனர். இந்நிகழ்வில் நெல் விற்பனை வாரியத் தலைவர், கூட்டுறவு மொத்த விற்பனையாளர் கழக தலைவர், உணவு ஆணையாளர் உள்ளிட்ட பல்வேறு சட்டபூர்வ தலைவர்கள் மற்றும் தன்னார்வலர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## நூற்றாண்டு காணும் அல் பாஸியத்துல் நஸ்ரியா கல்லூரி

பீ.எம் முக்தார்

இலங்கை முதல் முஸ்லிம் பெண்கள் பாடசாலை பேருவளை மருதானை அல்பாஸியதுல் நஸ்ரியா முஸ்லிம் மகளிர் கல்லூரி நூற்றாண்டு விழா காண்கிறது. 1924ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட பாடசாலையின் நூற்றாண்டு நிறைவு விழா இன்று செவ்வாய்க்கிழமை கொண்டாடப்படவுள்ளது.

KL/ AL FASIYATHUL NASRIYA MUSLIM BALIKA M.V. MARADANA-BERUWALA 1924 CENTENARY 2024

கல்லூரி அதிபர் மஸ்னவியா மூஸீன் தலைமையில் பாடசாலை ஆசிரியர், மாணவர்கள் SDEC, OGA, பெற்றோர், ஊர் நலன் விரும்பிகள் அனைவரினதும் பங்களிப்புடன் நடைபெறும் இவ் விழாவில் அதிதிகளாக மேல் மாகாண கல்வி அதிகாரிகளும், களுத்துறை கல்வி வலய அதிகாரிகளும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

நூற்றாண்டு நிறைவை முன்னிட்டு பாடசாலையில் பல நிகழ்வுகள் நடந்தேறின. அந்த வகையில் பாடசாலையின் நூற்றாண்டின் சின்னம் வெளியீட்டு நிகழ்வு கொண்டப்பட்டது. அந் நிகழ்வில் பாடசாலையின் வளர்ச்சிக்கும் புகழுக்கும் ஒத்தாசை புரிந்த முன்னாள் அதிபர்கள், ஆசிரியர்கள் என அனைவரும் சிறப்பான முறையில் கௌரவிக்கப்பட்டனர். மேலும் மற்றுமொரு நிகழ்வில் அல்பாயியத்துல் நஸ்ரியா முஸ்லிம் மகளிர் கல்லூரி உருவாவதற்கான ஆரம்ப கர்த்தாக்களை சார்ந்தோரும் போற்றி கௌரவிக்கப்பட்டனர்.

நூற்றாண்டு நிறைவு நினைவு கூரும்முகமாக பாடசாலையின் நிழற்படம் தாங்கிய முதல் நாள் முத்திரை உறை வெளியீட்டு நிகழ்வு, அந்நாள் தபால் அமைச்சர் பந்துல குணவர்தன பிரசன்னத்துடன் நடைபெற்றது.

## புத்தளத்தில் நத்தார் விழா

எம்.எச்.எம் சியாஜ்

இலங்கை தேசிய சமாதானப் பேரவையின் அனுசரணையுடன் புத்தளம் மாவட்ட சர்வ மதக் குழுவின் ஏற்பாட்டில் புத்தளம் சாந்த மரியா தேவாலயத்தின் வளாகத்தில் நத்தார் விழா கடந்த வாரம் நடைபெற்றது.

இதில் சர்வ மதத் தலைவர்கள் கலந்து கொண்டு நத்தார் தொடர்பான கருத்துக்களை தெரிவித்ததுடன் சாந்த மரியா அறநெறி மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம் பெற்றன.

## அல் மத்ரசதுல் நபவிய்யாவுக்கு உபகரணங்கள் கையளிப்பு

எம்.யூ.எம்.சனூன்

புத்தளம் அல் மத்ரசதுல் நபவிய்யாவுக்கு அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் புத்தளம் மாவட்ட செயற்குழுவினால் சுமார் இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான கதிரை தொகுதிகள், தொலைக்காட்சி மற்றும் ஒலிபரப்பு சாதனங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான றிஷாட் பதியுதீனின் நிதி ஒதுக்கீட்டில் இவைகள் வழங்கப்பட்டுள்ளன.மத்ரசாவின் வருடாந்த பரிசளிப்பு விழா அண்மையில் மத்ரஸா அதிபர் அஷ்ஷெய்க் ஜப்ரிஸ் தலைமையில் நடைபெற்ற போதே இவைகள் உத்தியோகபூர்வமாக வழங்கி வைக்கப்பட்டன. நிகழ்வில் அதிதிகளாக வைத்தியர் திபாயா, கட்சியின் உயர்பீட உறுப்பினர்களான எம்.எச்.முஹம்மத், ஏ.ஓ.அலி கான், எம்.எம்.முர்ஷித் உட்பட மத்ரசாவின் நலன்விரும்பிகள், உலமாக்கள், பெற்றோர்கள் என பலரும் கலந்துக்கொண்டனர்.

## புத்தளம் – கரைத்தீவில் 'பொன்பரப்பி விருதுகள் 2024'



எம்.யூ.எம்.சனூன்

புத்தளம் – கரைத்தீவில் முதற் தடவையாக துறைசார் நிபுணர்கள், மத்ரசாக்களிலிருந்து கரைத்தீவில் முதலில் பட்டம் பெற்று வெளியாகிய ஆலிம்கள் மற்றும் ஆலிமாக்கள், பட்டதாரிகள், தேசிய கல்வியியல் கல்லூரியிலாளர்கள், இளங்கலைப் பட்டதாரிகளைக் கௌரவிக்கும் விசேட நிகழ்வு கரைத்தீவு இளங்கலை பட்டதாரிகள் அமைப்பினால் கரைத்தீவு பெரியபள்ளியின் தலைமையின் கீழ் கரைத்தீவு முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்றது. இங்கு பிரதம அதிதியாக கரைத்தீவு முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் முன்னாள் ஆசிரியரும், புத்தளம் கல்வி வலய பாட இணைப்பாளராகவும் செயற்பட்டு அண்மையில் அரச பணிநிறைவு பெற்ற அருணாகரனும் கௌரவ அதிதியாக அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபை புத்தளம் நகரக் கிளை தலைவர் அஷ்ஷெய்க் ஜிப்னாஸ் (மிஸ்பாஹி) யும் கலந்து சிறப்பித்தனர்.

இதன் போது அறநெறி மாணவர்களுக்கு பரிசுப் பொருட்களும் வழங்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

# எலிக்காய்ச்சல் அபாயம்; கிழக்கில் விழிப்புணர்வு வேலைத் திட்டம்

(முகம்மட் முக்தார்)

கிழக்கு மாகாணத்தில் எலிக்காய்ச்சல் பரவும் அபாயத்தை தடுப்பதற்காக பொது மக்களுக்கும், விவசாயிகளுக்கும் விழிப்புணர்வூட்டும் வேலைத் திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக, சுகாதார வைத்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இவ்விழிப்புணர்வு வேலைத்திட்டம் நெற் செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் மற்றும் உப உணவுப் பயிர்ச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந் நோய் அதிகமாக விவசாயிகள் மத்தியிலேயே கூடுதலாக பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் இதுகுறித்து அவதானமாக செயற்படுமாறும் தெரிவித்துள்ளனர். எலிக்காய்ச்சல் பரவாமல் தடுப்பது தொடர்பாக விவசாயிகளுக்கும், விவசாய போதனாசிரியர்களுக்கும் பொதுச் சுகாதார பரிசோதகர்களால் விழிப்புணர்வூட்டும் வேலைத் திட்டம் ஏற்கனவே பிரதேச மட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

காய்ச்சல், தசைகளில் கடுமையான வலி, கண் சிவப்பு நிறம் அடைதல், சிறுநீர் வெளியேறுவது குறைவடைதல், சிறுநீருடன் இரத்தம் வெளியேறுதல் என்பன இந் நோயின் பிரதான அறிகுறிகளாகும். நாய், கால்நடைகள், பூனை, எலி போன்ற பிராணிகளின் கழிவுகள், அவற்றின் சிறுநீராலும் லெப்டோஸ்பைரா எனப்படும் நோய்காவியால் இது பரவுகிறது. பிராணிகளின் கழிவுகள் நீர்நிலைகளினூடாக, கண் மூக்கு சருமத்தினூடாக பக்ரீரியா உள் நுழைகிறது. ஒரு நபரிடம் இருந்து இன்னொருவருக்கு நேரடியாக இந்நோய் பரவுவதில்லை.

அதிக தொற்றுக்குள்ளாகக் கூடிய வயல் வெளிகளில் பணி புரிவோர் அவதானமாக இருக்க வேண்டும் எனவும் நீர் நிரம்பிய குட்டைகள், கழிவு நீர் குழிகள் என்பவற்றில் இறங்காது இருக்குமாறு சுகாதார அதிகாரிகள் பொதுமக்களை கேட்டுள்ளனர்.

அடுத்த சில நாட்களில் பாடசாலைகள் ஆரம்பமாகவுள்ளதால் பாடசாலை வளவுகளில் அண்மைய வெள்ள நீர் இன்னமும் வடிந்தோடாத நிலையில் காணப்பட்டால் அவற்றை உடனடியாக வெளியேற்ற பாடசாலை அதிபர்கள், பெற்றோர் நடவடிக்கை எடுப்பது மிக அவசியமானது எனவும் சுகாதார அதிகாரிகளால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நோய்க்கான அறிகுறிகள் எவருக்காவது காணப்பட்டால் விவசாயிகள் தமது பிரதேச சுகாதார வைத்தியதிகாரி அலுவலகத்துடன் அல்லது தத்தமது பொதுச் சுகாதார பரிசோதகர்களுடன் தொடர்பு கொண்டு நோய் தடுப்பு தொடர்பான மாத்திரைகளை பெற்றுக் கொள்ளுமாறும், கொதித்தாறிய நீரை பருகுமாறு கேட்டுள்ளனர்.



## வட்டவளை அணைக்கட்டை

# அகலப்படுத்துமாறு விவசாய அமைப்பு கோரிக்கை



(வெல்லாவெளி நிருபர்)

அண்மையில் ஏற்பட்ட பாரிய வெள்ளப்பெருக்கினால் வயல் நிலங்களும் ஆற்றுக் கட்டுக்களும் பெரிதாக பாதிப்புற்றிருக்கின்றன. ஒவ்வொரு வருடமும் ஏற்படும் வெள்ளத்தினால் இவ்வாறு பாதிப்புற்றாலும் இந்த வருடம் அதிக மழை காரணமாக வயல் நிலங்களில் பாரிய உடைப்புகள் ஏற்பட்டிருக்கின்றன.

இவ்வாறு மட்டக்களப்பு மாவட்டம் வெல்லாவெளி கமநல கேந்திர நிலையத்திற்குட்பட்ட ஆதவன் கமலநல அமைப்பின் தலைவர் சந்திரசேகரம் கருணைராஜன் தெரிவித்தார்.

ஆதவன் கமலநல அமைப்பின் தலைவர் இது தொடர்பில் கருத்துதெரிவிக்கையில்,

நவகிரி குளத்திலிருந்து இரண்டு வான்கதவுகள் நான்கு அடி உயரத்தில் திறக்கப்படும் போது அதிலிருந்து வெளியேறும் நீரை வெளியேற்றக்கூடிய அளவிற்கு வெல்லாவெளி மண்டூர் பிரதான பாதை ஊடகச் செல்கின்ற அணைக்கட்டுகள் காணப்படுகின்றன. அதில் பிரதானமானதாக வட்டவளை அணைக்கட்டு உள்ளது. இந்த அணைக்கட்டினால் மாத்திரம் வெளியேறும் பாரிய அளவிலான வெள்ள நீர் ஒன்று சேர்ந்து மட்டக்களப்பு வாவியைச் சென்றடைவதற்கு இடவசதி போதாமலுள்ளது. வயல் நிலங்களையும் பாதித்துக் கொண்டு வெள்ள நீர் செல்வதனால் விவசாயச் செய்கை பெருமளவில் பாதிக்கப்படுகின்றது.

வட்டவளை அணைக்கடை அகலப்படுத்தினால் எதிர்காலத்தில் இந்த அணைக்கட்டு ஊடாகச் செல்லும் வெள்ள நீர் இலகுவான மட்டக்களப்பு வாவியைச் சென்றடையும். அப்போது இப்பகுதியில் பாரிய வெள்ள அனர்த்தங்களோ, விவசாய நிலங்கள் பாதிப்படைவது வெகுவாகக் குறைவடையும்.

இவ்வருடம் ஏற்பட்ட பாரிய வெள்ளப் பெருக்கினால் எமது பகுதியிலுள்ள வட்டவளை, ஓட்டடிமுன்மாரி, போன்ற பல்வேறு வயல் கண்டங்கள் உடைப்பெடுத்து பாரியளவிலான பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

எனவே வட்டவளை அணைக்கட்டை அகலப்படுத்தப்படுவதனால் எதிர்காலத்தில் விவசாயிகளும், அப்பகுதி மக்களும் வெகுவாக நன்மையடைவர்கள்.

வட்டவளை அணைகட்டை அகலப்படுத்தினால் போரதீவுபற்று பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட மண்டூர், சின்னவத்தை, வெல்லாவெளி, வேத்துசேனை, பலாசோலை போன்ற பிரதேசங்கள் அதிகளவில் வெள்ளப் பெருக்கில் பாதிப்புறும் நிலைமையிலிருந்து வெகுவாகக் குறைவடையும். எனவே, இதனைக் கருத்திற்கொண்டு, விவசாயத்திணைக்களம். நீர்பாசனத் திணைக்களம், கமநல அபிவிருத்தி திணைக்களம், உள்ளிட்ட துறைசார்ந்தோர் செயற்பட முன்வர வேண்டும் என நாம் கோரிக்கை விடுக்கின்றோம் என அவர் இதன்போது தெரிவித்தார்.

# ரோஹிங்கிய அகதிகளுக்கு உதவிக் கரம்

(கியாஸ் ஷாபி)





திருகோணமலை ஜமாலியா முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் தங்க வைக்கப்பட்டுள்ள, ரோஹிங்கிய அகதிகளுக்கு திருகோணமலை மாவட்ட பெண்கள் வலையமைப்பினால், அத்தியாவசிய உலர் உணவுப் பொதிகள் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை வழங்கி வைக்கப்பட்டன. 30 குடும்பங்களைச் சேர்ந்த,103 பேருக்கும் போதுமான, உடு துணிகள் உட்பட நாளாந்தம் பாவனைக்குத் தேவையான அனைத்து பொருட்களும் இந்தப் பொதிகளில் உள்ளடக்கப்பட்டிருந்தன. திருகோணமலை மாவட்ட பெண்கள் வலையமைப்பின் இணைப்பாளர் பிரஷாந்தினி உதயகுமார், அதன் திட்ட முகாமையாளர் ஸ்டான்லி அனுஜா மற்றும் உதவி இணைப்பாளர் இந்திராசா கலாராணி ஆகியோர் இந்த உதவி வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர்.

# ஊடகவியலாளர் றமீஸுக்கு விருது வழங்கி கௌரவிப்பு

(றியாஸ் ஆதம்)



கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் மூலம் ஏற்பாடு செய்யப்படும் மாகாண இலக்கிய விழாவினை முன்னிட்டு மாகாணத்தில் உள்ள அரச நிறுவனங்களில் சேவையாற்றும் கலை இலக்கியத் துறையில் ஆர்வமுள்ள உத்தியோகத்தர்களுக்கிடையே நடத்தப்பட்ட படைப்பாக்கப் போட்டிகளின்போது வெற்றியீட்டியவர்களைப் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் (22) களுதாவளை சுயம்புலிங்கப் பிள்ளையார் ஆலய கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர். சரவணமுத்து நவநீதன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வின்போது பல்வேறுபட்ட துறைசார் உயர் அதிகாரிகள் இலக்கியத்துறை அதிதிகள் என பலர் அதிதிகளாக கலந்துகொண்டனர்.

இதன்போது மாகாண மட்டத்தில் புகைப்படக் கலைத்துறைப் போட்டியில் முதலாமிடம் பெற்ற அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரியில் ஆசிரியராக சேவையாற்றி வரும் சிரேஷ்ட ஊடகவியலாளரும், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் பிறை எப்.எம் அறிவிப்பாளருமான எம்.ஏ.றமீஸ் முதலாமிடம் பெற்றமைக்கான விருதினைப் பெற்றுக் கொண்டதுடன், புதுக்கவிதைப் போட்டியிலும் வெற்றி பெற்று பரிசில்களையும் பெற்றுக் கொண்டார்.

# கிராம மட்ட கலாசார சபை உறுப்பினர்களுக்கான பொதுக்கூட்டம்





(எச்.எம்.எம். பர்ஸான்)

கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட கிராம மட்ட கலாசார சபை உறுப்பினர்களுக்கான பொதுக்கூட்டம் கடந்த சனிக்கிழமை (21) பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. பிரதேச செயலாளர் ஏ.தாஹிர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், கிராம மட்ட கலாசார உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். இதில், பிரதேச கலாசார உத்தியோகத்தர் ஏ.எல்.பீர் முகம்மட் காஸிமி, பிரதேச செயலக மொழிபெயர்ப்பாளர் ஏ.பீ.எம்.முஸ்தபா இஸ்லாஹி, ஓய்வுபெற்ற கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஏ.எம்.அப்துல் காதர் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் பலர் கலந்து கொண்டனர்.

இதில், ஒவ்வொரு கிராம சேவர் பிரிவிலும் சமூக மட்ட பண்பாட்டு நடவடிக்கைகளை மையப்படுத்தி நிகழ்ச்சிகளை நடாத்துதல் என தீர்மானிக்கப்பட்டது.

# 'பால்நிலை உணர்திறனை மேம்படுத்தல்' பொலிஸாருக்கு செயலமர்வு



(கியாஸ் ஷாபி)

பால்நிலை உணர்திறனை மேம்படுத்தல் என்ற தொனிப் பொருளில், திருகோணமலை மாவட்ட பொலிஸ் உத்தியோகத்தர்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட செயலமர்வொன்று திருகோணமலை நகரில், தனியார் விடுதியில் ஞாயிற்றுக்கிழமை நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

சட்ட அமுலாக்கம் தொடர்பாக பால்நிலை அடிப்படையிலான வன்முறைக்கான அணுகல் சேவையை மேம்படுத்துதல் மற்றும் அதற்கான ஆதரவு அமைப்பை வலுப்படுத்துதல் தொடர்பான உள்ளடக்கங்களை இந்த செயலமர்வு கொண்டிருந்தது. இதனை E- wing எனப்படும் பெண்கள் மற்றும் சிறுவர்களை மேம்படுத்து வதற்கான திருகோணமலை சுயாதீன மையம் ஏற்பாடு செய்திருந்தது. குறித்த செயலமர்வில், மாவட்டத்தில் உள்ள, ஒன்பது பொலிஸ் பிரிவுகளை சேர்ந்த 31 பொலிஸ் உத்தியோகத்தர்களும், நான்கு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளும் கலந்து கொண்டனர். இதன் வளவாளராக திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் சாமிந்த ஹெட்டியாரச்சி கலந்துகொண்டார்.

இதன்போது, பால்நிலை சமத்துவம், பெண்களின் அதிகாரம், பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு கல்வி, சுகாதாரம், அரசியல், பொருளாதார முடிவெடுக்கும் செயல்முறைகளில் சமஉரிமை, பெண் சமத்துவம் தொடர்பான புதிய சட்டதிட்டங்களை நடைமுறைப்படுத்தல், பெண்களை இலக்காகக் கொண்ட தீங்கு விளைவிக்கும் நடைமுறைகளை ஒழித்தல், பெண்கள் எதிர் நோக்கும் பால்நிலை ரீதியான சம்பவங்கள் மற்றும் அதனை தடுக்க வேண்டிய அணுகுமுறைகள் உட்பட பல விடயங்கள் வளவாளரால் தெளிவூட்டப்பட்டது.

# சிறுவாமுனை மக்களுக்கு உலர் உணவுப் பொதிகள்





(வெல்லாவெளி நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கில் பாதிப்புற்ற மண்முனை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள சிறுவாமுனைக் கிராம மக்களுக்கு பசுமை இல்லம் எனும் தன்னார்வ அமைப்பினரால் உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன. இவ்வுதவித்திட்டத்திற்கு பசுமை இல்லம் ஊடாக ஜேர்மனியிலுள்ள பி.சினன் இராசன் சிவலிங்கம், கௌரியராஜ் குணா ஆகியோர் நிதி உதவிகளை வழங்கியுள்ளனர். இதன்போது அப்பகுதியிலுள்ள 40 குடும்பங்களுக்கு உலர் உணவு பொதிகள் வழங்கப்பட்டன. இதன்போது பசுமை இல்லத்தின் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கான இணைப்பாளர் அருள், மாவட்ட இணைப்பாளர் வசந்தபாபு உள்ளிட்ட பலர் இதன்போது கலந்து கொண்டிருந்தனர்.

# சமூக சிந்தனைப் புரட்சியை ஏற்படுத்திய கிறிஸ்துவின் வார்த்தைகள்



அருள் சத்தியநாதன்

“அரசாங்க கோழிமுட்டை,அம்மிக் கல்லையும் உடைக்குமாம் என்பார்கள். அஞ்ஞானத்திலும் மூட நம்பிக்கைகளிலும், சிந்தனை வரட்சியிலும் மூழ்கிக் கிடந்தவர்களை இயேசுவின் மொழிகள் தட்டியெழுப்பின. உன்னிடம் இரண்டு அங்கிகள் இருந்தால் ஒன்றை இல்லாதவனுக்குக் கொடு என்ற வார்த்தை உலகெங்கும் பாடசாலைகளையும் மருத்துவமனைகளையும் நூலகங்களையும் உருவாக்கின”

பைபிளின் பழைய ஏற்பாட்டுக்கும் புதிய ஏற்பாட்டுக்கும் இடையே நிறைய வேறுபாடுகள் உள்ளன. கிரேக்க, எகிப்திய புராணங்களை எடுத்துக் கொண்டால் அரசர்களின், மக்களின் செயற்பாடுகளில் கடவுள் என்பார் நேரடியாகவே தலையீடு செய்வதைப் பார்க்கலாம். கடவுளே நேரிடையாகவோ அல்லது அவதாரமாகவோ வருவார். போர்களை நடத்துவார், அல்லது முடித்து வைப்பார். அரசர்களின் தீர்மானங்களில் தலையீடு செய்வார். ஒரு பக்கச் சார்பாக நடந்து கொள்வார். இதே தன்மைகளை விவிலியத்தின் பழைய ஏற்பாட்டிலும் காணலாம்.

எகிப்தில் அடிமைகளாக சேவகம் செய்யும் இலட்சக்கணக்கான யூதர்களை மீட்டு வரும் பொறுப்பை கடவுளே, மோசசிடம் அளிக்கிறார். அவரை வழிநடத்தி, இக்கட்டான தருணங்களில் ஆலோசனை வழங்கி அவரைக் காப்பாற்றவும் செய்கிறார். எகிப்திய அரசனால் துரத்தப்படும் போது செங்கடலை இரண்டாகப் பிரியச் செய்து இஸ்ரேலியர்களை அதனூடாக மறுகரையை அடையச் செய்யும் கடவுள், பாதி வழியைக் கடந்த நிலையில், பிரிந்து நின்ற கடலை ஒன்றுகூடச் செய்து எகிப்திய படையை அழிக்கிறார். பாலைவனத்தை யூதர்கள் கடக்கும் போது “மன்னா” என்ற உணவை வானில் இருந்து பொழியச் செய்து அவர்களுக்கு உணவளிக்கவும் செய்கிறார். யூதேயா என்ற இன்றைய பாலஸ்தீனப் பகுதியை வாக்களிக்கப்பட்ட நாடாக கடவுளே யூதர்களுக்கு வழங்குகிறார். பலஸ்தீனத்தை இஸ்ரேல் முழுமையாகக் கபளீகரம் செய்வதற்கான முதலாவது காரணம் அது கடவுளால் யூதர்களுக்கு வாக்களிக்கப்பட்ட நாடாக *(Promised Land)* இஸ்ரேல் கருதுவதுதான்.

விவிலியத்தின் புதிய ஏற்பாட்டில் கிறிஸ்துபாடுகளை அடையும் போது அவருக்கு உதவும்படி கடவுளைத்தான் அழைக்கிறார். கடவுளே, கடவுளே ஏன் என்னைக் கைவிட்டீர்? எனப் புலம்புகிறார். ஆனால் அவரது போதனைகள் மிக எளிமையாகவும், சாதாரண மனிதர்களும் அறிந்து கொள்ளும்படியாகவும் உள்ளன. வேதங்கள், மத போதனைகள் என்றால் அவை விளங்கிக் கொள்ள சிரமமானதாக இருப்பதே வழமை. நல்ல மரங்கள் கெட்ட கனிகளைக் கொடுப்பதில்லை என்கிறார். நல்ல முறையில் வளர்க்கப்பட்டவர்கள் தீமைகளைச் செய்வதில்லை என்பது இதன் பொருள்.

திருமணங்கள் அல்லது விழாக்களுக்கு செல்லும் நம்மில் சிலர், முன் வரிசையில் அமர்ந்து கொள்வார்கள். புகைப்படங்கள், வீடியோவில் தான் தெரிய வேண்டும் என்பதற்காகவும் அப்படிச் செய்வதும் உண்டு. இவ்வாறான வைபவங்களை நடத்துபவர்கள் யார் யார் முன் வரிசையில் அமர வேண்டும் என்றொரு பட்டியலை வைத்திருப்பார்கள். அவர்களுக்கு வேண்டியவர்கள் வரும்போது தானாக வந்து அமர்ந்திருப்பவர்களை எழுப்பி பின் வரிசைக்கு போகச் சொல்லிவிட்டு தனக்கு வேண்டியவர்களை முன் வரிசையில் அமரச் செய்வார்கள்.

இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னர் இவ் வழக்கம் இருந்திருக்கிறது என்பதை இயேசுவின் உதாரணமொன்றின் மூலம் புரிந்து கொள்ள முடிகிறது. திருமணத்துக்கு செல்லும் போது முன்வரிசையில் அமராமல் பின்வரிசையில் அமர்ந்தால், திருமணம் நடத்துபவர் எங்கே நான் அழைத்த நபரைக் காணவில்லையே எனக் கூட்டத்துக்குள்ளே தேடி உங்களை அடையாளம் கண்டு, என்ன இங்கே அமர்ந்துவிட்டீர்களே, வாருங்கள் முன் வரிசையில் அமருங்கள் என கையைப் பிடித்து கூட்டிச் செல்வார்.

இந்த உதாரணத்தைக் குறிப்பிடும் கிறிஸ்து, தாழ்ந்தவன் உயர்த்தப்படுவான், உயர்ந்தவன் தாழ்த்தப்படுவான் என்கிறார். இது வாழ்வியல் உண்மை.

ரோம ராஜ்யத்தின் பிடியில் மத்திய கிழக்கு ஆட்பட்டிருந்தது. ரோமர்களின் பிடியில் இருந்து மீட்பதற்கு ஒருவர் வருவார் என யூதர்கள் எதிர்பார்த்திருந்தனர். அந்த மீட்பரே இயேசு என நம்பவும் செய்தனர். ஆனால் தான் நிலத்தையும் ஆட்சியையும் மீட்க வந்தவன் அல்ல, மக்களை பாவங்களில் இருந்தும் சிறைபட்ட ஆன்மாக்களையும் மீட்க வந்த மீட்பர் என இயேசு கூறியபோதும் மக்களும், அதிகாரிகளும், யூத சமயத் தலைவர்களும் அதை விளங்கிக் கொள்ளவில்லை.

இயேசுவின் மற்றொரு வாக்கியம் இன்றைக்கும் செல்லுபடியாகக் கூடியது.

நீங்கள் யாருக்கு எப்படி அளக்கிறீர்களோ அதே விதமாக உங்களுக்கும் அளக்கப்படும் என்பதே அவ் வாக்கியமாகும்.

நம்மில் பலர் இப்படித்தான் தனது நலன்களுக்கும் இலாபங்களுக்காகவும் பிறரை ஏமாற்றுவார்கள். மோசடி செய்வார்கள். பிறரை சிரமத்துக்கு உள்ளாக்குவார்கள். ஆனால் இவர்கள் எந்த மரக்காலால் பிறருக்கு அளந்தார்களோ அதே மரக்கால் கொண்டு இவர்களுக்கும் அளக்கப்படும் என்பதை அவர்கள் தெரிந்து வைத்திருப்பதில்லை. இதை நம் வாழ்வில் பிரத்தியட்சமாக நாம் பார்த்து வருகிறோம் அல்லவா?

இயேசுவின் போதனைகள் எளிமையானவை. எனினும், அவற்றில் புதைந்திருக்கும் உண்மைகள் ஆழமானவை, பொருள் பொதிந்தவை. எந்தச் சமயத்தை சார்ந்தவர்களும் இயேசுவின் சரிதையை சொல்லும் மார்க்கு அருளப்பர், லூக்காஸ், மத்தேயூ ஆகியவற்றில் எவற்றிலேனும் ஒன்றை எடுத்து கதைப் புத்தகம் போல வாசிக்கலாம் என்பது இதன் விசேஷம்.

ஒரு சமயத்தில இயேசு சிலருடன் அமர்ந்து உணவருந்திக் கொண்டிருக்கிறார். அப்போது அங்கே வரும் சிலர் இவர் பாவிகளோடும், நோயாளிகளுடனும் உணவருந்திக் கொண்டிருக்கிறாரே என குற்றம் சாட்ட முற்பட நோயாளர்களுக்குத் தான் மருத்துவம் தேவை என்பதால் அவர்களை இரட்சிக்கத்தான் நான் வந்தேன் என்கிறார். இதில் சோஷலிசம் தெரிகிறது அல்லவா?

அவரது பிறப்பு பெரும் புரட்சிகளை நிகழ்த்தியது என்பதே நத்தார் பண்டிகையின் விசேஷம். ஏனெனில், உலகெங்கும் மிகப்பெரிய சமூக, ஆன்மிக, தொண்டு மனப்பான்மை மற்றும் அன்பு செலுத்துதல் என்பனவற்றில் புரட்சிகரமான மற்றும் ஏறுமுக சிந்தனை மாற்றங்களை ஏற்படுத்திய ஒரு சமயமாக கிறிஸ்துவத்தை நாம் காண்கிறோம். பைபிளின் பழைய ஏற்பாட்டில் பல்லுக்குப் பல், கண்ணுக்குக் கண் என்றிருந்த பழியுணர்ச்சி மிக்க மனப்பான்மையை மாற்றியமைத்தது கிறிஸ்தவம். கண்ணுக்குக் கண் என்பதை யூதர்கள் வேத வாக்காகக் கொண்டிருந்தபோது அவர்களிடம், ஒரு கன்னத்தில் அறைந்தால் அவனைத் திருப்பி அறையாமல் மறு கன்னத்தைக் காட்டு எனவும், உன்னிடம் இரண்டு ஆடைகள் இருந்தால் ஒன்றை இல்லாதவனுக்குக் கொடு என்றும் மாற்றுச் சிந்தனையை எடுத்துச் சொன்னார் இயேசு கிறிஸ்து. யூதர்கள் அதை ஏற்கவில்லை. அவரை சிறை பிடித்து வதைத்துக் கொன்றார்கள். யூதர்கள் இன்றைக்கும் கண்ணுக்குக் கண் என்ற சித்தாந்தத்தில் இருந்து மாறவேயில்லை என்பதை உதாரணங்களோடு விளக்கும் அவசியம் இல்லை.

பொறுத்தல், மன்னித்தல், சுகப்படுத்தல், உணவளித்தல், அபயமளித்தல் என்ற கொள்கைகளை மட்டுமின்றி அவற்றை நடைமுறையிலும் கிறிஸ்தவம் செய்து காட்டியது. இது ஒரு புதிய செய்தியாக அவர்களுக்கு இருந்தது.

பைபிளின் புதிய ஏற்பாட்டில், நான் சிறைச்சாலை கைதியாகவும், நோயாளியாகவும், ஆதரவற்றவனாகவும் பசித்தவனாகவும், தாகமுடையவனாகவும் இருந்தபோது, நீங்கள் என்னை வந்து பார்க்கவில்லையே! என்று தன் சீடர்களை நோக்கி கிறிஸ்து கேள்வி கேட்பதாக கூறப்பட்டுள்ளது. சீடர்களோ வியப்புடன் அவரைப் பார்த்து, எப்போது நீங்கள் கைதியாகவும், நோயாளியாகவும், ஆதரவற்றவராகவும் இருந்தீர்கள்? அப்படி ஒரு விஷயம் எங்களுக்குத் தெரியாதே! நாங்கள் எப்போது உங்களை பார்க்காதிருந்தோம்? எங்களுக்கு விளக்கமாக சொல்லுங்கள் என்று அவரிடம் கேட்பதோடு குழம்பியும் போகிறார்கள். அப்போது இயேசு அவர்களை நோக்கி என்னை விட சிறியோருக்கு நீங்கள் செய்பவை எனக்கு செய்வதற்கு ஒப்பாகும் என விளக்கமளிக்கிறார்.

இதன் பொருட்டு பல்வேறு உபாதைகளால் அவதிப்படும் ஏழை எளியோருக்கு நீங்கள் செய்யும் உதவிகள் எனக்கு (இறைவனுக்கு) செய்வதற்கு ஒப்பானது என்பதாகும். கிறிஸ்துவின் இந்த வாக்கானது, உலகில் பெரும் சமூக புரட்சியை ஏற்படுத்தியது. கிறிஸ்தவ மிஷனரிமார்கள், தேவாலயங்கள், கிறிஸ்தவ மதப் பிரிவுகள் உலகெங்கும் பாடசாலைகளையும், ஆஸ்பத்திரிகளையும் திறந்தார்கள். நூல்களை பதிப்பித்தார்கள். வேலை வாய்ப்புகளை உருவாக்கினார்கள். மூட நம்பிக்கைகளை தகர்த்தார்கள். எல்லா மனிதர்களும் சரி சமனானவர்கள். உயர்ந்த தாழ்வு இல்லை என்றார்கள். மனித குலத்தில் இவ்வாறான ஒரு மலர்ச்சியும் எழுச்சியும் முன்னெப்பொழுதும் ஏற்பட்டதேயில்லை. இவை அனைத்தும் இயேசுவின் பெயரால், அவரது வார்த்தைகளின் பேரில் நடைபெற்றன.

இலங்கையையும் இந்தியாவையும் எடுத்துக் கொண்டால் சாதி ஏற்றத்தாழ்வுகளும் பெண்ணடிமைத்துவமும் நிறைந்த நாடுகள். மூட நம்பிக்கைகளும் அவ்வாறு தான். கல்வியில் சிறந்தவர்களாக வடக்கு தமிழர்கள் திகழ்கின்றார்கள் என்றால் அதற்கு விதை போட்டவர்கள் அமெரிக்க மிஷனரிகள். ஆசியாவின் முதல் மருத்துவமனை யாழ்ப்பாணத்திலேயே ஆரம்பிக்கப்பட்டது. முதல் மருத்துவமனை யாழ்ப்பாணத்திலேயே திறக்கப்பட்டது. சாமுவேல் கிறீன் என்ற அமெரிக்க மிஷனர் 1840 களில் மானிப்பாயில் முதல் ஆஸ்பத்திரியையும் முதல் மருத்துவ பாடசாலையையும் ஆரம்பித்தார். ஜோ ஸ்கட்டர் யாழ்ப்பாணத்தில் ஒரு மருத்துவமனையை 1819ஆம் ஆண்டளவில் ஆரம்பித்தார். ஆண் மருத்துவர் பிரசவம் பார்ப்பதை விட அப்பெண் மரணமடைவதே மேல் என யாழ். சமூகம் கருதியதால் அவரது மகள் மருத்துவம் பயின்று யாழ். கர்ப்பிணிகளுக்கு பிரசவம் பார்த்ததாக அறிகிறோம். ஸ்கட்டரின் பேத்தியான ஐடா சோபியா ஸ்கட்டரே வேலூர் சி.எம்.எஸ். மருத்துவமனையை நிறுவியவர். இயேசு கிறிஸ்துவின் போதனைகள் எவ்வளவு விசாலமான சமூக புரட்சிக்கு வித்திட்டன என்பதை இந்த உதாரணங்கள் எடுத்துச் சொல்லும். ஜோன் ஸ்கட்டரின் மகள் விடுமுறையில் மானிப்பாய் வந்திருந்தபோது பிரசவ மரணங்கள் அதிகம் நிகழ்வதைக் கண்டு தன் தந்தையிடம், ஏன் உங்களுக்கு உதவ முடியாதா? என்று கேட்கிறார். அதற்கு அவர், நான் ஆணாக இருப்பதால் தன் மனைவி இறந்தாலும் பரவாயில்லை, ஆண் மருத்துவரை அழைக்க மாட்டோம் என பிடிவாதமாக இருக்கிறார்கள் என்ற தந்தையின் பதில் அவரை அதிர்ச்சியில் ஆழ்த்த, அந்த இளம் பெண் லண்டன் திரும்பி மருத்துவம் பயில்கிறார். மருத்துவராக பட்டம் பெறும் அவர் மானிப்பாய் திரும்பி வந்து தமிழ்ப் பெண்களுக்கு பிரசவம் பார்க்கிறார். பிரசவ மரணங்களின் எண்ணிக்கை குறைகிறது. எத்தகைய உதவும் மனப்பான்மை!

மற்றவருக்காக இரங்கும், உதவும் இம் மனப்பான்மை எங்கிருந்து வந்தது என்றால் அது இயேசுவின் கொடையாக வருகிறது. இலங்கை இந்திய நாடுகளில் மட்டுமல்ல ஆசிய, ஆபிரிக்க நாடுகளிலும் இந்த சமூகப் புரட்சி, அறிவுப் புரட்சி நடைபெற்றது. கல்வி என்பது அரசன் பிரபுக்கள் மற்றும் உயர் குலத்தோர் மத்தியில் மட்டுமே நிலவியபோது, கல்வியை அனைவருக்குமாக்கியது கிறிஸ்தவம். பாடசாலைகளைத் திறந்து அனைவருக்கும் கல்வி என்று அதை பொதுமைப்படுத்தியவரகள் கிறிஸ்தவர்கள். இன்று அனைத்து பெற்றோருமே தமது பிள்ளைகளுக்கு உயர் கல்வி வழங்க வேண்டும் என்பதற்காக முயற்சிகள் செய்கிறார்கள். ஏனெனில் அது தான் அழியா மூலதனம். அதை நூற்றாண்டுகளுக்கு முன் சிந்தித்தவர்கள் கிறிஸ்தவர்கள்.

இச் சமூக புரட்சியை ஏற்படுத்தியவர் இயேசு கிறிஸ்து. அவர் அவதரித்த தினமாக டிசம்பர் 25ஆம் திகதி உலகெங்கும் கொண்டாடப்படும் போது, இதை ஒரு மத நிகழ்வாகப் பார்க்காமல், கிறிஸ்துவின் வார்த்தைகளைப் புரிந்து கொண்டவர்கள் அவற்றை உலகெங்கும் எவ்வாறு அர்ப்பணிப்புடன் செயல்படுத்தினார்கள் என்பதையே நாம் பார்க்க வேண்டும். நத்தார் ஒரு பண்டிகை தான். உறவினர்கள், குடும்பங்கள் ஒன்று கூடுவது, வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வது, ஒன்று கூடி உண்டு குடித்து மகிழ்வது என்பது நிகழ்வாகவே பார்க்கப்படுகிறது. இது மட்டுமல்ல, இந் நத்தார் காலத்தில் தான் ஏராளமான பரிசுகள் சிறுவர்களையும் முதியவர்களையும் சென்றடைகின்றன. ஏழைகள், வசதியற்றவர்கள், அநாதைகள் ஆகிய உதவி வேண்டி நிற்பவர்களுக்கு ஏராளமான உதவிகள் சென்றடைகின்றன. ஆலயங்களில் நாட்டப்படும் நத்தார் மரங்களில் தொங்கவிடப்படும் பரிசுப் பொருட்கள் சிறுவர் மத்தியில் பகிரப்படுகிறது.

உன் செல்வத்தைப் பகிர். கல்வியைப் பகிர். ஆடைகளைப் பகிர். அன்பைப் பகிர். உன்னில் எது மேலதிகமோ அவற்றைப் பகிர் என்பது இயேசு அருளியவை. அதைப் புரிந்து கொண்டு, அக் கலாசாரத்தில் ஊறியவர்கள் அதைத் தொடர்ந்தும் செய்கின்றனர். தற்போது கிறிஸ்தவர்களைத் தாண்டி, ஏனைய மதத்தினர் மத்தியிலும் இப் பகிரும் பழக்கம் வழக்கமாகி வருகிறது. உலகெங்கும் ஏராளமான பில் கேட்ஸ்கள் உருவாகியிருக்கிறார்கள் என்றால் அதற்கான ஆணிவேர் கிறிஸ்துவின் மொழிகளே என்பதை இன்றைய தினத்தில் நாம் நினைவில் நிறுத்துவோம்.




# நடிகர் அல்லு அர்ஜுனின் இல்லத்தில் தாக்குதல்

**8 பேர் கைது**

ஹைதராபாத்தில் உள்ள தெலுங்கு நடிகர் அல்லு அர்ஜுனின் ஜூப்ளி ஹில்ஸ் இல்லத்தில் ஞாயிற்றுக்கிழமை (22) பலர் புகுந்து தாக்குதல் நடத்தியதுடன், அங்கிருந்த சொத்துக்களையும் சேதப்படுத்தியுள்ளனர்.

நடிகரின் வீட்டிற்குள் நுழைந்தவர்கள் உஸ்மானியா பல்கலைக்கழகத்தின் கூட்டு நடவடிக்கைக் குழுவின் உறுப்பினர்கள் அல்லு அர்ஜுன், அவரது மனைவி மற்றும் அவர்களது குழந்தைகளான அல்லு அர்ஹா, அல்லு அயன் ஆகியோர் வீட்டை விட்டு வெளியேறியுள்ளனர்.








என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். டிசம்பர் 4 ஆம் திகதி ஹைதராபாத்தில் உள்ள சந்தியா திரையரங்கில் அல்லு அர்ஜுன் நடித்த புஷ்பா 2 படத்தின் முதல் காட்சியின் நெரிசலில் சிக்கி உயிரிழந்த பெண்ணின் குடும்பத்திற்கு ரூ.1 கோடி இழப்பீடு வழங்க வேண்டும் என தாக்குதல்தாரிகள் இதன்போது கோஷம் எழுப்பினர். தாக்குதலின் போது, அல்லு அர்ஜுன் வீட்டில் இருக்கவில்லை. எவ்வாறெனினும் தாக்குதலின் பின்னர், அத்துடன், இந்த சம்பவம் தொடர்பாக 8 பேர் கைது செய்யப்பட்டு ஜூப்ளி ஹில்ஸ் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டதாக இந்தியா டுடே செய்தி வெளியிட்டுள்ளது. சமூக ஊடகங்களில் பரவலாகப் பகிரப்பட்ட ஒரு வீடியோவில், குழுவின் உறுப்பினர்கள் அல்லு அர்ஜுனின் வீட்டில் பூந்தொட்டிகள் மற்றும் பிற பொருட்களை தரையில் வீசுவதைக் காணக்கூடியதாக இருந்தது.

நெரிசல் தொடர்பாக தனக்கு எதிரான குற்றச்சாட்டுகளுக்கு மத்தியில் தவறான நடத்தைகளில் ஈடுபட வேண்டாம் என நடிகர் மக்களை வலியுறுத்தி சில மணிநேரங்களுக்குப் பின்னர் இந்த தாக்குதல் நடத்தப்பட்டது. இந்த சம்பவத்திற்கு தெலுங்கானா முதல்வர் ரேவந்த் ரெட்டி கண்டனம் தெரிவித்துள்ளதோடு, பொலிஸாரை நடவடிக்கை எடுக்குமாறும் கேட்டுக் கொண்டார்.

அல்லு அர்ஜுன் தனது புஷ்பா 2 படத்தின் பிரீமியர் காட்சியைக் காண வந்த சந்தியா திரையரங்கில் டிசம்பர் 4 அன்று ஏற்பட்ட நெரிசலில் சிக்கி ரேவதி என்ற 35 வயது பெண் உயிரிழந்திருந்தார். ரேவதியின் ஒன்பது வயது மகன் ஸ்ரீ தேஜ் ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்த வழக்கில் கடந்த டிசம்பர் 13 ஆம் திகதி நடிகர் அல்லு அர்ஜுன் கைது செய்யப்பட்டு, தெலுங்கானா மேல் நீதிமன்றின் தீர்ப்பிற்கு அமைவாக பிணையில் விடுவித்தது. எனினும், அடுத்த சில நாட்களில் அல்லு அர்ஜுன் மீது முதல்வர் ரேவந்த் ரெட்டியும் பொலிஸாரும் கடுமையான குற்றச்சாட்டுகளை முன்வைத்திருந்தனர்.

# பிரியங்கா காந்திக்கு எதிராக மனு தாக்கல்



பிரியங்கா காந்தியை தகுதிநீக்கம் செய்யக் கோரி கேரள நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த வழக்கு ஜனவரியில் விசாரணைக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது. கேரள மாநிலம் வயநாடு தொகுதியில் நடந்த நாடாளுமன்ற இடைத்தேர்தலில் காங்கிரஸ் கட்சி சார்பில் போட்டியிட்ட பிரியங்கா காந்தி வெற்றி பெற்றார். இந்நிலையில், பா.ஜ.க.வைச் சேர்ந்த நவ்யா ஹரிதாஸ், வயநாடு அமைச்சர் பிரியங்கா காந்திக்கு எதிராக கேரள உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார். பிரியங்கா காந்தி தாக்கல் செய்த தேர்தல் பிரமாண பத்திரத்தில் அவரது சொத்துகள் குறித்தும், குடும்ப சொத்துகள் குறித்தும் தவறான தகவல்களை வழங்கி உள்ளார். இது தேர்தல் நடத்தை விதிகளுக்கு எதிரானது, ஊழல் குற்றச்சாட்டுக்கு சமமானது என அந்த மனுவில் கூறப்பட்டுள்ளது. எனவே பிரியங்கா காந்தியின் வெற்றியை இரத்துசெய்து, அவரை அமைச்சர் பதவியிலிருந்து தகுதிநீக்கம் செய்ய உத்தரவிட வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளார். கேரள நீதிமன்றத்தில் நேற்று முதல் ஜனவரி 5ம் திகதி வரை விடுமுறை நாட்கள் என்பதால், இந்த வழக்கு ஜனவரியில் விசாரணைக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதுகுறித்து பா.ஜ.க.வின் தரம்தாழ்ந்த அரசியல் என காங்கிரஸ் கட்சி தெரிவித்துள்ளது.

## ரூ.20 கோடி பெறுமதியான போதைப்பொருள் மீட்பு

அசாம் மாநிலம் கச்சார் மாவட்டத்தில் வீதி வழியாக போதைப்பொருள் கடத்தப்படுவதாக பொலிஸாருக்கு இரகசிய தகவல் கிடைத்தது. அதன் பேரில் சிறப்பு அதிரடிப்படை பொலிஸார் மாவட்டத்தின் பல பகுதிகளில் அதிரடி சோதனை நடாத்தினர் சில்கூரி என்ற இடத்துக்கு அருகே வீதியில்



சந்தேகத்துக்கு இடமளிக்கும் வகையில் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த ஒரு நபரை பொலிஸார் தடுத்து நிறுத்தி சோதனை செய்தனர். இதன்போது அவர் மோட்டார் சைக்கிளில் மறைத்து வைத்து போதைப்பொருள் கடத்தி வந்தது கண்டுபிடிக்கப்பட்டது. அவரிடம் இருந்து "ஹெராயின்" போதைப்பொருள் மற்றும் "யாபா" என அழைக்கப்படும் போதை மாத்திரைகளை பொலிஸார் பறிமுதல் செய்தனர். அதன் மதிப்பு 20 கோடி இந்திய ரூபாய் இருக்கும் என பொலிஸார் தெரிவித்தனர்.

## உத்தரபிரதேஷில் 03 காலிஸ்தானிய பிரிவினைவாதிகள் சுட்டுக் கொலை




பஞ்சாபின் குர்தாஸ்பூர் மாவட்டத்தில் பொலிஸ் நிலையம் மீது தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டின் கீழ் மூன்று காலிஸ்தானி பிரிவினைவாதிகள், உத்தரப் பிரதேசத்தின் பிலிபித் மாவட்டத்தில் திங்கட்கிழமை (23) அதிகாலை நடந்த என்கவுன்டரில் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

குற்றம் சாட்டப்பட்ட குர்விந்தர் சிங் (25), வீரேந்திர சிங் என்ற ரவி (23), மற்றும் ஜஸ்பிரீத் சிங் என்ற பிரதாப் சிங் (18) ஆகியோரே இவ்வாறு பஞ்சாப் மற்றும் உத்தரபிரதேச பொலிஸார் இணைந்து நடத்திய என்கவுண்டரில் உயிரிழந்துள்ளனர். இதன்போது, பிரிவினைவாதிகளிடமிருந்து இரண்டு ஏகே 47 துப்பாக்கிகள், இரண்டு க்ளோக் பிஸ்டல்கள் மற்றும் பல வகை துப்பாக்கி ரவைகளையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

முன்னதாக, சனிக்கிழமையன்று (21) குர்தாஸ்பூர் மாவட்டத்தின் கலனூர் சப்-டிவிஷனில் கைவிடப்பட்ட பொலிஸ் நிலையத்தில் பிரிவினைவாதிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர். எவ்வாறெனினும் பலத்த பொலிஸ் கண்காணிப்புக்கு மத்தியில் நடந்த இந்த தாக்குதலில் உயிர் மற்றும் உடைமைகளுக்கு எந்த சேதமும் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## சட்டவிரோதமாக டில்லியில் குடியேறிய 175 பங்களாதேஷ் பிரஜைகள்

பங்களாதேஷில் இந்துக்கள் மற்றும் பிற சிறுபான்மையினர் மீது தாக்குதல் நடத்தப்பட்டு வருகிறது. அதே சமயத்தில், பங்களாதேஷிலிருந்து சட்டவிரோதமாக இந்தியாவில் குடியேறுபவர்கள் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. டில்லியில் குடியேறிய பங்களாதேஷத்தினரை அடையாளம் கண்டு, கடும் நடவடிக்கை எடுக்குமாறு டில்லி தலைமை செயலாளருக்கும், பொலிஸ் அதிகாரிக்கும் கவர்னர் வி.கே.சக்சேனா கடந்த 10ம் திகதி உத்தரவிட்டதற்கமைய, கடந்த 11ம் திகதி டில்லி பொலிஸார், சட்டவிரோதமாக குடியேறிய பங்களாதேஷத்தினருக்கு எதிரான நடவடிக்கையை ஆரம்பித்தனர். இதற்கிடையே, டில்லி புறநகர் மாவட்டத்தில் எவ்வித ஆவணங்களும் இன்றி சட்டவிரோதமாக குடியிருக்கும் பங்களாதேஷத்தினரை கண்டறியும் ஆவண சரிபார்ப்பு பணி சனிக்கிழமை மாலை 6 மணிக்கு ஆரம்பித்தது. உள்ளூர் பொலிஸார் அடங்கிய தனிப்படையினர், மாவட்ட வெளிநாட்டினர் பிரிவு அதிகாரிகள், சிறப்பு பிரிவினர் ஆகியோர் இந்த சரிபார்ப்பு பணியில் ஈடுபட்டனர். வீடு, வீடாக சென்று வாக்காளர் அட்டை, குடும்ப அட்டை போன்ற ஆவணங்களை கேட்டு வாங்கி பரிசோதித்தனர். சிலரது சொந்த ஊருக்கும் சென்று ஆவணங்களை சரிபார்த்தனர். சந்தேகத்துக்குரியவர்களின் உளவு தகவல்களை சேகரித்தனர்.




12 மணி நேரம் நடந்த இந்த சரிபார்ப்பு பணியில், பங்களாதேஷிலிருந்து சட்டவிரோதமாக குடியேறியவர்கள் என்ற சந்தேகத்தில் 175 பேர் அடையாளம் காணப்பட்டனர். இதுபோல, கடந்த 13ம் திகதி, டில்லி நகரப்பகுதியில் நடந்த பரிசோதனையில் சட்டவிரோதமாக குடியேறிய பங்களாதேஷத்தினர் என்ற சந்தேகத்தில் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் அடையாளம் காணப்பட்டனர். 2 பேர் கைது செய்யப்பட்டனர்.

டில்லி சதாரா பொலிஸார் கடந்த 12ம் திகதி நடத்திய சோதனையில் 32 பேரை அடையாளம் கண்டறிந்தனர். இதன்மூலம், டில்லியில் இதுவரை 1,500 பங்களாதேஷத்தினர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

# மெரினாவில் உணவுத் திருவிழா

சென்னையில் மகளிர் சுயஉதவி குழுக்களின் உணவு திருவிழாவையொட்டி, மெரினா கடற்கரையில் மக்கள் கூட்டம் அலைமோதியது. சென்னை மெரினா கடற்கரையில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் சார்பில் மகளிர் சுயஉதவி குழுக்களை ஊக்குவிக்கவும், பாரம்பரிய உணவுகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையிலும் உணவு திருவிழாவை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் கடந்த 20ஆம் திகதி ஆரம்பித்து வைத்தார்.



உணவு திருவிழாவை ஆர்வத்துடன் காணவும், ஆசையுடன் உணவு உண்டு மகிழவும் தினசரி ஆயிரக்கணக்கான மக்கள் குவிந்த வண்ணம் உள்ளனர். கோவை கொங்கு மட்டன் பிரியாணி, கரூர் நாட்டுக்கோழி பிரியாணி, நாமக்கல் பள்ளிப்பாளையம் சிக்கன், ராணிப்பேட்டை ஆற்காடு பிரியாணி, சிவகங்கை மட்டன் உப்புக்கறி, மதுரை கறி தோசை, நாமக்கல் முடவாட்டு கிழங்கு சூப், கன்னியாகுமரி பழம்பொரி, குதிரை வாலி புலாவ், சிந்தாமணி சிக்கன், உள்ளிட்ட பல்வேறு உணவுகளை பொதுமக்கள் அதிக அளவில் வாங்கி உண்டு மகிழ்ந்தனர். சனி, ஞாயிறு விடுமுறை என்பதால் உணவு திருவிழாவில் கடந்த 2 நாட்களாக கூட்டம் அலைமோதியது. பெரியவர்கள் முதல் சிறியவர்கள் வரை குடும்பம் குடும்பமாக மெரினாவுக்கு சென்றனர். விழாவில் கூட்டம் நிரம்பி வழிந்தன. மெரினாவை ஒட்டியுள்ள காமராஜர் வீதியில் விவேகானந்தர் இல்லம் முதல் உழைப்பாளர் சிலை வரை கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. கடந்த 3 நாட்களில் மட்டும் ரூ.50 இலட்சத்துக்கு உணவு வகைகள் விற்பனையானதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

## குடியரசு தின விழாவில் தமிழக ஊர்தி புறக்கணிப்பா? அரசு விளக்கம்

குடியரசு தின விழாவில் தமிழக அலங்கார ஊர்தி புறக்கணிக்கப்பட்டு உள்ளதாகவும் அதற்கு தி.மு.க அரசின் திறனற்ற நிர்வாகமே காரணம் என்றும் அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி கண்டனம்




தெரிவித்த நிலையில், தமிழக அரசின் உண்மை சரிபார்ப்பகம் இது வதந்தி என நிராகரித்துள்ளது. வதந்திகளை நம்பவேண்டாம் என்று குறிப்பிட்டு அது தொடர்பாக விளக்கமும் அளித்துள்ளது.

முன்னதாக எடப்பாடி பழனிசாமி தனது சமூகவலைதளப் பக்கத்தில், "குடியரசு தின விழாவில், தலைநகர் டில்லியில் வருடந்தோறும் நடக்கின்ற அணிவகுப்பில் , தமிழகத்தின் பண்பாடு மற்றும் கலாச்சாரத்தை உயர்த்தி காட்டும் தமிழகத்தின் அலங்கார அணிவகுப்பு ஊர்தி அதிமுக ஆட்சிக்காலங்களில் இடம்பெறுவது மரபு, ஆனால் திமுக அரசின் திறனற்ற நிர்வாகத்தால், குடியரசு தின விழாவில் இந்த ஆண்டும் அலங்கார ஊர்தி இடம்பெறாத நிலை உருவாகியுள்ளதாக அறிகிறேன், ஸ்டாலின் அரசின் தொடர் அலட்சிய நிர்வாகத்திற்கும் , அனுமதி வழங்காத மத்திய அரசுக்கும் எனது கடுமையான கண்டனங்கள்." எனக் குறிப்பிட்டிருந்தார்.




# பிரேசிலில் விமானம் வீழ்ந்து நொறுங்கியதில் 10 பேர் பலி

பிரேசிலின் தெற்கு பகுதியில் அமைந்துள்ள கிராமடோ நகரில் **(Gramado)** ஒரு சிறிய தனியார் விமானமொன்று வீழ்ந்து விபத்துக்குள்ளானதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 10 பேர் உயிரிழந்துள்ளனர்.

விமானத்தை இயக்கி வந்த பிரேசிலிய தொழிலதிபர் லூயிஸ் கிளாடியோ கலியாசி, அவரது மனைவி, மூன்று மகள்கள் மற்றும் ஏனைய குடும்ப உறுப்பினர்கள் இந்த விபத்தில் உயிரிழந்தனர். ஞாயிற்றுக்கிழமை (22) காலை விமானம் புறப்பட்ட சில நிமிடங்களுக்குப் பின்னர் விபத்து ஏற்பட்டுள்ளதாக பிரேசிலின் தேசிய குடிமைத் தற்காப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

விமானம் கட்டிடம் ஒன்றின் மீது மோதியது, பின்னர் ஒரு குடியிருப்புடனும், இறுதியாக ஒரு தளபாட வணிக நிலையம் ஒன்றில் மோதி விபத்துக்குள்ளாகியதாக குறிப்பிடப்படுகிறது. இந்த விபத்தில் தரையில் இருந்த 17 பேர் காயமடைந்துள்ளதாகவும், அவர்களில் இருவரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாகவும் கிராமடோ அமைந்துள்ள



பிராந்தியமான ரியோ கிராண்டே டோ சுல் இற்கான சிவில் பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தனர்.

விபத்தினால் சேதமடைந்த கட்டிடங்களின் குப்பைகளுக்கு மத்தியில் அவசரகால பணியாளர்கள் மீட்பு நடவடிக்கையினை முன்னெடுத்திருந்தனர். கிராமடோ ஒரு பிரபலமான சுற்றுலா தலமாகும், இது பண்டிகை காலங்களில் விசேட நிகழ்வுகளை நடத்துவதற்கு புகழ் பெற்றது.

இப்பகுதி இந்த ஆண்டு மே மாதம் வெள்ளத்தால் கடுமையாக பாதிக்கப்பட்டது. இதில் பலர் உயிரிழந்தனர் மற்றும் 150,000 மக்களை அவர்களின் வீடுகளில் இருந்து இடம்பெயர்ந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# காஸாவுக்கான மனிதாபிமான உதவிகளை தடுக்கும் இஸ்ரேல்

அக்டோபரில் இருந்து காஸாவுக்கு 12 லொறிகளில் மட்டுமே உணவு மற்றும் தண்ணீர் விநியோகிக்கப்பட்டுள்ளதாக ஒக்ஸ்ஃபாம் நிறுவனம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக அந்நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில்




தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: “வடக்கு காசாவுக்குள் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்பட்ட 34 லொறிகளில் கடந்த இரண்டரை மாதத்தில் வெறும் 12 லொறிகள் மட்டுமே அனுமதிக்கப்பட்டுள்ளன. இஸ்ரேல் இராணுவம் வேண்டுமென்றே முடக்கிவிட்ட கெடுபிடிகளால் உணவு, தண்ணீரை கொண்டு செல்வதில் சிக்கல் ஏற்பட்டது” என குறிப்பிட்டப்பட்டுள்ளது. இத்தகைய கெடுபிடிகளால் காசாவில் மனிதாபிமான நெருக்கடி ஏற்பட்டுள்ளதாகவும் ஒக்ஸ்ஃபாம் சுட்டிக் காட்டுகிறது.

மேலும், “மனிதாபிமான உதவிகள் கிடைக்காமல் ஆயிரக்கணக்கான மக்கள் தவித்து வருகின்றனர். ஆனால் இஸ்ரேல் இராணுவம் இரக்கமின்றி நடந்து கொள்கிறது. உணவு, தண்ணீர் லொறிகளை எடுத்துச் செல்ல அத்தனை அனுமதியும் கிடைத்த பின்னரும் கூட ஜபாலியாவில் தேவையே இன்றி லொறிகளை தடுத்து நிறுத்துகிறது. மேலும், இராணுவப் பகுதிகளில் உணவு, தண்ணீரை இறக்கிவைக்க சாரதிகளை நிர்ப்பந்திக்கின்றனர். கடந்த மாதம் மட்டும் 11 லொறிகள் இவ்வாறாக நிறுத்திவைக்கப்பட்டன.” என்று ஒக்ஸ்ஃபாம் குற்றஞ்சாட்டியுள்ளது.

இதேபோல், நியூயோர்க்கை தலைமையிடமாகக் கொண்டு இயங்கும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், “இஸ்ரேல் அதிகாரிகள் திட்டுமிட்டு காஸாவுக்கு உணவு, தண்ணீர் கிடைப்பதைத் தடுத்து வருகின்றனர்.

இதனால் ஆயிரக்கணக்கானோர் அங்கே உயிரிழந்துள்ளனர். இஸ்ரேலின் இந்த நடவடிக்கையால் மேலும் உயிரிழப்புகள் அதிகரிக்கும்” என்று கூறியுள்ளது. டிசம்பர் 19 ஆம் திகதி வெளியிட்ட அறிக்கையில் அந்த அமைப்பு இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# செனட் பதவியில் விருப்பம் இல்லை:

## ட்ரம்ப் மருமகள் லாரா அறிவிப்பு

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் குடியரசு கட்சியை சேர்ந்த டொனால்ட் ட்ரம்ப் வெற்றி பெற்றார். அவர் அடுத்த மாதம் தனது பொறுப்பை ஏற்க உள்ளார். ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்ற உடன் டொனால்ட் ட்ரம்ப் தனது புதிய நிர்வாகத்துக்கான வெளியுறவு அமைச்சராக மார்கோ ரூபிபியோவை நியமித்துள்ளார். மார்கோ ரூபியோ புளோரிடாவில் இருந்து செனட் சபைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டவர்.மார்கோ ரூபியோ வெளியுறவு அமைச்சரானால் காலியாக உள்ள செனட் உறுப்பினர் பதவிக்கு டிரம்பின் மருமகளான லாரா ட்ரம்ப் நியமிக்கப்படுவார் என தகவல்கள் வந்தன.

இந்த நிலையில், ட்ரம்பின் மருமகள் லாரா ட்ரம்ப் தனது எக்ஸ் தள பக்கத்தில் பதிவிடுகையில், அமெரிக்க செனட் சபை உறுப்பினர் பதவிக்கான பரிசீலனையில் இருந்து எனது பெயரை விலக்க முடிவு செய்துள்ளேன். எனினும் வரும் ஜனவரி மாதம் மிக பெரிய அறிவிப்பு வெளியிடப்படும் என்பதை இந்த நேரத்தில் உறுதியளிக்கிறேன் என குறிப்பிட்டுள்ளார்.

# பனாமா கால்வாயை அடுத்து கிறீன்லாந்து மீது கண் வைத்த ட்ரம்ப்

ஜனவரியில் ஜனாதிபதியாக மீண்டும் பதவியேற்கவுள்ள டொனால்ட் ட்ரம்ப், கிறீன்லாந்தை அமெரிக்காவின் கட்டுப்பாட்டில் வைத்திருக்க விரும்புவதாக ஞாயிற்றுக்கிழமை (22) தெரிவித்தார்.

சமூக தளத்தில் இது குறித்து பதிவொன்றை இட்டுள்ள குடியரசுக் கட்சியின் தலைவர், உலகம் முழுவதும் தேசிய பாதுகாப்பு மற்றும் சுதந்திரத்திற்கான நோக்கங்களுக்காக, கிறீன்லாந்தின் உரிமை மற்றும் கட்டுப்பாடு ஒரு முழுமையான தேவை என்று அமெரிக்கா உணர்கிறது – என குறிப்பிட்டுள்ளார்.



கிறீன்லாந்து தன்னாட்சி சுயாட்சியைக் கொண்டிருக்கும்போது, அது தற்போதும் டென்மார்க் இராச்சியத்தின் ஒரு பகுதியாக உள்ளது. ட்ரம்ப், பேபால் இணை நிறுவனர் கென் ஹோவரியை டென்மார்க்கிற்கான அமெரிக்கத் தூதராக அறிவிக்கும் போதே இந்த அறிக்கையை வெளியிட்டார். கீறீன்லாந்து மீதான ட்ரம்ப்பின் ஆர்வம் புதிதான விடயமல்ல. கடந்த 2017 முதல் 2021 வரையிலான அவரது முதல் ஜனாதிபதி காலத்தில், கிறீன்லாந்து பிரதேசத்தை கட்டுப்படுத்த வேண்டும் என்ற விருப்பத்தை ட்ரம்ப் வெளிப்படுத்தியிருந்தார். கிறீன்லாந்தின் இயற்கை வளங்கள் மற்றும் புவிசார் அரசியல் பொருத்தத்திற்கு ஈர்க்கப்பட்ட ட்ரம்ப், 2019 ஆம் ஆண்டில், கிறீன்லாந்தை வாங்க விரும்புவதாகக் குறிப்பிட்டார். எனினும், அவரது ஆசை, டென்மார்க்கில் உள்ள தலைவர்களிடமிருந்து கடுமையான பின்னடைவை ஏற்படுத்தியிருந்தது.

கிறீன்லாந்து வடக்கு அட்லாண்டிக் பெருங்கடலில் அமைந்துள்ள ஒரு கண்டம் அல்லாத உலகின் மிகப்பெரிய தீவாகும். அதன் மூலோபாய இருப்பிடத்தைப் பொறுத்தவரை, இது ஆர்ட்டிக்கிற்கு அருகில் உள்ளதுடன் ரஷ்யா உட்பட வேறு சில நாடுகள் இப் பிரதேசத்தினை கட்டுப்படுத்த போட்டியிடுகின்றன.

# தாய்வானுக்கு இராணுவ உதவி; அமெரிக்காவுக்கு சீனா எதிர்ப்பு

தாய்வானுக்கு இராணுவ உதவியை அறிவித்த அமெரிக்காவுக்கு எதிர்ப்பு தெரிவித்த சீனா, அமெரிக்கா நெருப்போடு விளையாடுவதாக எச்சரித்துள்ளது.

தாய்வான் பாதுகாப்புத் துறை சேவைகள், இராணுவக் கல்வி மற்றும் பயிற்சி ஆகியவற்றுக்கு 57.1 கோடி டொலர் நிதியுதவி வழங்குவதற்கு அமெரிக்க



ஜனாதிபதி ஜோ பைடன் சனிக்கிழமை ஒப்புதல் அளித்தார். முன்னதாக, 29.5 கோடி டொலர் மதிப்பிலான இராணுவ விற்பனைக்கும் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாக அமெரிக்க பாதுகாப்புத் துறை வெள்ளிக்கிழமை தெரிவித்தது. இந்த அறிவிப்புகளுக்கு எதிராக ‘தாய்வானுக்கு ஆயுதம் அளிப்பதை அமெரிக்கா தவிர்க்க வேண்டும். தாய்வானில் அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையைக் கெடுக்கும் அபாயகரமான நகர்வுகளை அமெரிக்கா நிறுத்திக்கொள்ள வேண்டும்’ என சீன வெளியுறவு அமைச்சகம் வலியுறுத்தியது.

சுமார் 2.3 கோடி மக்கள்தொகை கொண்ட ஜனநாயகத் தீவு நாடான தாய்வானை சீனா தனது பிராந்தியமாக உரிமைக் கோருவது குறிப்பிடத்தக்கது. இவ்விவகாரத்தில் அமெரிக்கா, சீனாவுக்கு இடையே நேரடி மோதல் நிலவி வருகிறது. இந்நிலையில், அமெரிக்காவின் இராணுவ உதவி, சீனாவின் தாக்குதலைத் தடுக்க தாய்வானுக்கு உதவும். கடந்த செப்டெம்பர் மாதத்திலும் இதே நோக்கங்களுக்காக தாய்வானுக்கு 56.7 கோடி டொலர் நிதியுதவியை பைடன் அரசு அளித்திருந்தது. அதன்தொடர்ச்சியாக, ‘அமெரிக்காவின் இப்புதிய அறிவிப்புகள், தாய்வான் பாதுகாப்புக்கான அந்நாட்டின் உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்துவதாக’ தாய்வான் வெளியுறவு அமைச்சகம் வெளியிட்ட சமூக ஊடகப் பதிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# மீண்டும் பலித்தது பாபா வங்காவின் கணிப்பு..

பல்கேரியா நாட்டை சேர்ந்தவர் பாபா வங்கா. 1911 ஆம் ஆண்டு பிறந்த இவரது நிஜ பெயர் பாண்டேவா டிமிட்ரோவா. தன்னுடைய 12 வயதில் சக்தி வாய்ந்த புயலில் சிக்கிய பாபா வங்கா தனது கண்பார்வையை இழந்தார். இருப்பினும் இந்த துயர சம்பவத்திற்கு பிறகு எதிர்காலத்தை கணிக்கும் சக்தியை பாபா வங்கா பெற்றதாக கூறப்படுகிறது.



அதன்படி பிரிட்டன் இளவரசி டயானாவின் மரணம், அமெரிக்காவின் இரட்டை கோபுரம் மீதான தாக்குதல், கொரோனா பெருந்தொற்று போன்றவை பாபா வங்காவின் கணிப்புகளில் கண்கூடாக நடந்தன. இதனால் புத்தாண்டு வருகிறது என்றாலே பாபா வங்காவின் கணிப்புகள் கவனிக்கப்படும். 2025 ஆம் ஆண்டு பிறக்க இன்னும் சில நாட்களே உள்ள நிலையில் அதற்கான பாபா வங்காவின் கணிப்புகள் வெளியாகி இணையத்தில் வைரலாகி வருகின்றன.

இந்நிலையில் 2024 ஆம் ஆண்டுக்கான பாபா வங்காவின் கணிப்புகள் சில நிஜமாகியுள்ளன. அவற்றில் முக்கியமானது, புற்றுநோய்க்கான மருந்து கண்டுபிடிப்பு. மனித குலத்துக்கு அச்சுறுத்தலாக உள்ள உயிர்கொல்லி நோயான புற்றுநோய்க்கு இந்த ஆண்டில் தடுப்பு மருந்து கண்டுபிடிக்கப்படும் என கணித்திருந்தார் பாபா வங்கா. அவர் கணித்ததை போலவே புற்றுநோய்க்கு மருந்து கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. கடந்த பிப்ரவரி மாதம் புற்று நோய் தடுப்பு மருந்தின் இறுதிக் கட்டத்தில் இருப்பதாக ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் அறிவித்தார்.

விரைவில் இதுகுறித்த அறிவிப்பு வெளியிடப்படும் என்றும் தெரிவித்தார். இந்நிலையில் புற்றுநோய் தடுப்பு மருந்து கண்டுபிடிப்பு பணி வெற்றி பெற்றதாக ரஷ்யா அறிவித்துள்ளது.

அடுத்த ஆண்டு முதல் இந்த புற்றுநோய் தடுப்பு மருந்து விற்பனைக்கு வரும் என அறிவித்துள்ளது.

# கொங்கோவில் படகு கவிழ்ந்தலில் 38 பேர் பலி

கொங்கோ நாட்டில் பாயும் புசிரா ஆற்றில் பயணியரை ஏற்றி சென்ற படகு கவிழ்ந்து, 38 பேர் உயிரிழந்துடன் 100க்கும் அதிகமானோர் காணாமல்போன சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது. மத்திய ஆபிரிக்க நாடான கொங்கோவில் உள்ள ஈக்குவடார் மாகாணத்தில் புசிரா ஆறு பாய்கிறது. கிறிஸ்மஸ் பண்டிகைக்காக இன்சென்டி நகருக்கு வர்த்தகர்கள் உட்பட 150க்கும் அதிகமானோர் படகில் சென்றுகொண்டிருந்தனர்.

அப்போது அளவுக்கு அதிகமான பயணியரை ஏற்றி சென்றதால், எடை



தாங்காமல் திடீரென படகு கவிழ்ந்தது. இதில் 38 பயணியர் உயிரிழந்தனர்; 100க்கும் மேற்பட்டோர் மாயமாகினர்.

காணாமல் போன நபர்களை மீட்கும் பணியில் இடர்முகாமைத்துவ மீட்புப்படையினர் ஈடுபட்டுள்ளனர். எனவே, பலி எண்ணிக்கை அதிகரிக்க கூடும் என அஞ்சப்படுகிறது.

# உணவுக்காக முண்டியடிப்பு: கூட்ட நெரிசலில் சிக்கி 32 பேர் பலி

## நைஜீரியாவில் சம்பவம்

ஆபிரிக்க நாடான நைஜீரியாவில் கடும் பொருளாதார நெருக்கடி நிலவுகிறது. இதனால் இலட்சக்கணக்கானோர் அங்கு பட்டினியில் சிக்கித் தவிக்கின்றனர். இந்தநிலையில் அனம்ப்ரா மாகாணம் ஒகிஜா நகரில் கிறிஸ்மஸ் பண்டிகையையொட்டி அன்னதானத்துக்கு தன்னார்வ அமைப்பு சார்பில் பொதுமக்களுக்கு உணவு பொட்டலம் வழங்கப்பட்டது. இதனை பெறுவதற்காக ஏராளமானோர் முண்டியடித்துச் சென்றனர். அப்போது ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 32 பேர் பலியாகினர்.

இதேபோல் தலைநகர் அபுஜாவில் உள்ள ஒரு தேவாலயத்தில் கிறிஸ்மஸ் பண்டிகையை முன்னிட்டு பரிசுப்பொருட்கள் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. இதனால் அங்கு நூற்றுக்கணக்கானோர் திரண்டனர். அப்போது பரிசுகளை பெற மக்கள் போட்டிப்போட்டு சென்றதால் கூட்ட நெரிசல் ஏற்பட்டது. இதனால் சிறுவர்கள் உட்பட 35 பேர் உயிரிழந்தனர்.



Sports விளையாட்டு
oruvansports@gmail.com

# இங்கிலாந்து கவுண்டி போட்டியில் அசித்த பெர்னாண்டோ ஒப்பந்தம்




இலங்கை வேகப்பந்து வீச்சாளர் அசித்த பெர்னாண்டோ இங்கிலாந்தின் முதன்மையான கவுண்டி கிரிக்கெட் கிளப்பான கிளமோர்கன் விளையாட்டுக் கழகத்துடன் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளார்.

இதன்படி, கிளாமோர்கன் அணியை பிரதிநிதித்துவப்படுத்தும் முதல் இலங்கை வீரர் என்ற பெருமையை அவர் பெற்றுள்ளார். எனினும், அசித்த பெர்னாண்டோ இதற்கு முன்னரும் இங்கிலாந்தின் நொட்டிங்ஹாம்ஷயர் அணிக்காக விளையாடியுள்ளார்.

கிளமோர்கன் ஸ்போர்ட்ஸ் கிளப் இங்கிலாந்து கவுண்டி கிரிக்கெட் போட்டியின் இரண்டாவது பிரிவின் (Division Two) கீழ் விளையாடுகிறது, மேலும் போட்டி வரும் ஏப்ரல் மாதத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இரண்டு மாதங்கள் கிளமோர்கன் அணிக்காக அசித்த விளையாடுவார். அதில் 7 போட்டிகளில் விளையாடவுள்ளார்.

தற்போது 27 வயதாகும் அசித்த, இலங்கை அணிக்காக 21 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 72 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார்.

80 முதல் தர போட்டிகளில் 251 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார்.

இந்த ஆண்டு இலங்கை அணியின் இங்கிலாந்து சுற்றுப்பயணத்தின் போது அசித்த சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தினார், அங்கு அவர் 17 விக்கெட்டுகளுடன் போட்டியில் அதிக விக்கெட்டுகளை வீழ்த்தியவராவார்.

# தாய் வைத்தியசாலையிலிருந்த போதும் நாட்டுக்காக விளையாடியவர் அஸ்வின்

## பிரதம் மோடி சுட்டிக்காட்டு



சென்னையில் பெரு வெள்ளம் வந்தபோது தென்னாபிரிக்காவுக்கு எதிரான போட்டியில் அஸ்வின் விளையாடியதையும், தாய் வைத்திசாலையில் இருந்தபோது, நாட்டுக்காக அவர் விளையாடியதையும் மோடி தனது பாராட்டுக் கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து அண்மையில் ஓய்வுபெற்ற நட்சத்திர கிரிக்கெட் வீரர் அஸ்வினைப் பாராட்டி பிரதமர் மோடி கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.

அந்தக் கடிதத்தில், "அஸ்வினின் ஓய்வு அறிவிப்பு சர்வதேச கிரிக்கெட் ரசிகர்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது" என்றும் "புத்திசாலித்தனம், கடின உழைப்புடன் ஆடியதற்காக அஸ்வினுக்கு தனது வாழ்த்துகள்" என்றும் மோடி தெரிவித்துள்ளார்.

இளம் வீரராக டெஸ்ட்டில் அறிமுகமாகி 5 விக்கெட்கள் வீழ்த்தியதையும், 2011இல் ஒருநாள் உலகக்கோப்பை வென்ற அணியில் அஸ்வின் இடம்பிடித்ததையும் அவர் நினைவுகூர்ந்துள்ளார். 2013இல் சம்பியன்ஸ் கோப்பை போட்டியில் இந்திய அணியை வெற்றி பெறச் செய்ததற்காக அஸ்வினுக்கு மோடி தனது பாராட்டுகளை தெரிவித்தார்.

# தென்னாபிரிக்க ரி20 லீக்: பார்ல் றோயல்ஸ் அணியில் எசான் மாலிங்க




இலங்கை அணியின் இளம் வேகப் பந்துவீச்சாளரான எசான் மாலிங்கவை பார்ல் றோயல்ஸ் அணி SA T20 லீக் தொடருக்காக ஒப்பந்தம் செய்துள்ளது.

SA T20 தொடருக்காக பார்ல் ரோறயல்ஸ் அணிக்காக ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்த இங்கிலாந்து வீரர் ஜோன் டேர்னர், இங்கிலாந்து லையன்ஸ் அணிக்காக விளையாடவுள்ளதால் பார்ல் றோயல்ஸ் அணியிலிருந்து விலகியுள்ளார்.

இந்நிலையில் ஜோன் டேர்னரின் இடத்துக்கு எசான் மாலிங்க ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளதாக உத்தியோகப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# இலங்கைக்கு எதிரான போட்டியில் வில்லியம்சன் - கான்வே விலகல்




இலங்கை அணிக்கு எதிரான ஒருநாள் மற்றும் ரி20 தொடருக்கான நியூசிலாந்து அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த அணியின் கப்டனாக மிட்செல் சாட்னர் நியமிக்கப்பட்டுள்ளார். மேலும் தனிப்பட்ட காரணங்களுக்காக இந்த 2 தொடர்களில் வில்லியம்சன் மற்றும் கான்வே விலகியுள்ளனர்.

இந்த தொடரில் அதிரடி ஆட்டக்காரர் ஜேக்கப் அறிமுகமாகி உள்ளார். இவர் இரு தொடர்களிலும் நியூசிலாந்து அணியில் இடம் பிடித்துள்ளார்.

**நியூசிலாந்து - ரி20 அணி விவரம்:-**

மிட்செல் சான்ட்னர் (கேப்டன்), மைக்கேல் பிரேஸ்வெல், மார்க் சாப்மேன், ஜேக்கப் டஃபி, ஜாக் ஃபௌல்க்ஸ், மிட்ச் ஹே, மாட் ஹென்றி, பெவோன் ஜேக்கப்ஸ், டேரில் மிட்செல், க்ளென் பிலிப்ஸ், ரச்சின் ரவீந்திரா, டிம் ராபின்சன், நாதன் ஸ்மித்




# இந்திய-பாகிஸ்தான் போட்டிகள் ஐக்கிய அரபு அமீரகத்தில்

சம்பியன்ஸ் கிண்ண போட்டிகளில் பாதுகாப்பு காரணங்களால் இந்திய அணி பாகிஸ்தான் செல்ல மறுத்ததால் இந்திய- பாகிஸ்தான் போட்டிகள் ஐக்கிய அரபு அமீரகத்தில் நடத்தப்பட உள்ளன.

இரு அணிகளுக்கிடையிலான பொதுவான இடமாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபை ஐக்கிய அரபு அமீரகத்தை தேர்வு செய்துள்ளது. இதனை பாகிஸ்தான் கிரிக்கெட் சபை செய்தித் தொடர்பாளர் ஆமிர் மிர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து பேசிய ஐக்கிய அரபு அமீரகத்தின் கிரிக்கெட் சபைத் தலைவர், "பொதுவான இடம் குறித்த முடிவை பாகிஸ்தான் கிரிக்கெட் சபை ஐ.சி.சி.-யிடம் அறிவித்துள்ளது. தற்போது இந்தியா மற்றும் பாகிஸ்தான் அணிகள் இடையிலான சம்பியன்ஸ் கிண்ணம் தொடரின் போட்டிகள் ஐக்கிய அரபு அமீரகத்தில் நடைபெறும்."

"சம்பியன்ஸ் கோப்பை தொடரின் பொதுவான இடம் பற்றிய முடிவை, இந்தத் தொடரை நடத்தும் பாகிஸ்தான் தான் எடுக்க வேண்டும். இதுப்பற்றிய இறுதி முடிவு மொசின் நக்வி மற்றும் ஷேக் அல் நயன் இடையிலான ஆலோசனைக்கு பிறகு எடுக்கப்பட்டது," என்று தெரிவித்தார்.

# ஆஷஸ், ரி20, ஒருநாள் தொடர்: இங்கிலாந்து மகளிர் அணி

2025ஆம் ஆண்டுக்கான மகளிர் ஆஷஸ் தொடருக்கு இங்கிலாந்து அணி அறிவிக்கப்பட்டுள்ளது. அனைத்து போட்டிகளிலும் ஹீதர் நைட் கெப்டனாக நியமிக்கப்பட்டுள்ளார்.

அவுஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் இங்கிலாந்து அணி 3 ரி20, 3 ஒருநாள் மற்றும் 4 நாள் டெஸ்ட் போட்டியில் விளையாடவுள்ளது.

ஜனவரி 2ஆம் திகதி அவுஸ்திரேலியா செல்லும் இங்கிலாந்து அணி ஜனவரி 9 ஆம் திகதி ஆளுநர் லெவன் அணிக்கு எதிரான பயிற்சி ஆட்டத்தில் விளையாடவுள்ளது.

ரி20 போட்டிகள் சிட்னி, கான்பெரா, அடிலெய்ட் மைதானங்களிலும், ஒருநாள் போட்டிகள் சிட்னி, மெல்போர்ன், ஹோபர்ட் ஆகிய மைதானங்களிலும் . 4 நாட்கள் கொண்ட பகலிரவு டெஸ்ட் போட்டி மெல்போர்ன் மைதானத்தில் நடைபெறவிருக்கிறது.

**இங்கிலாந்து மகளிர் ஒருநாள் அணி**

ஹீதர் நைட் (கப்டன்), டாமி பியூமண்ட், லாரன் பெல், மையா பௌச்சியர், ஆலிஸ் கேப்ஸி, கேட் கிராஸ், சார்லி டீன், சோபியா டங்க்லி, சோஃபி எக்லெஸ்டோன், லாரன் ஃபைலர், சாரா க்ளென், எமி ஜோன்ஸ், நாட் ஸ்கிவர்-ப்ரண்ட், டேனி வியாட்-ஹாட்ஜ்.

இங்கிலாந்து ரி20 அணி

ஹீதர் நைட் (கப்டன்), லாரன் பெல், மையா பௌச்சியர், ஆலிஸ் கேப்ஸி, சார்லி டீன், சோபியா டங்க்லி, சோஃபி எக்லெஸ்டோன், லாரன் ஃபைலர், டேனியல் கிப்சன், சாரா க்ளென், பெஸ் ஹீத், எமி ஜோன்ஸ், ஃப்ரேயா கெம்ப், லின்சி ஸ்மித், நாட் ஸ்கிவர்-ப்ரண்ட், டேனி வியாட்-ஹாட்ஜ்.

இங்கிலாந்து டெஸ்ட் அணி

ஹீதர் நைட் (கப்டன்), டாமி பியூமண்ட், லாரன் பெல், மையா பௌச்சியர், கேட் கிராஸ், சார்லி டீன், சோபியா டங்க்லி, சோஃபி எக்லெஸ்டோன், லாரன் ஃபைலர், பெஸ் ஹீத், எமி ஜோன்ஸ், ரியானா மெக்டொனால்ட்-கே, நாட் ஸ்கிவர்-ப்ரண்ட், டேனி வியாட்-ஹாட்ஜ்.




# சென்மேரிஸ் உதைப்பந்தாட்ட வெற்றிக் கிண்ணம் யங் பைட்டர்ஸ் வெற்றி



■ பு.கஜிந்தன்

வடமராட்சி கிழக்கு, கட்டைக்காடு சென்மேரிஸ் விளையாட்டு கழகம் நடாத்திய உள்ளூர் போட்டியான Kspl season 3 உதைப்பந்தாட்ட தொடரின் இறுதி போட்டி நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

சென்மேரிஸ் விளையாட்டு கழகத் தலைவர் தலைமையில் மாலை 3.00 மணியளவில் மங்கள விளக்கேற்றலுடன் இறுதி போட்டி ஆரம்பமானது. இறுதி போட்டியில் யங் பயிட்டர்ஸ் அணியை எதிர்த்து பயிட்டர் கிங்ஸ் அணி மோதியது.

விறு விறுப்பாக நடைபெற்ற போட்டியின் இறுதியில் 2-0 என்ற கோல் கணக்கில் யங் பைட்டர்ஸ் அணி வெற்றி பெற்று Kspl season 3 இன் வெற்றிக் கிண்ணத்தை தட்டிச் சென்றது முதலாம், இரண்டாம் அணிகளுக்கு வெற்றிக் கேடயத்துடன் பணப் பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன.



இந்தப் பத்திரிகை கொழும்பு - 08 கலாநிதி என்.எம்.பெரேரா மாவத்தை, இலக்கம் 42 இல் அமைந்துள்ள "அபே ஜனஹண்ட பப்ளிகேஷன் பிரைவேட் லிமிடெட்" நிறுவனத்தினரால் 2024 டிசம்பர் 24ம் திகதி செவ்வாய்க்கிழமை தயார் செய்யப்பட்டு, எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட் அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.